மாநகராட்சி மன்றம்

Registered as a Newspaper … விலை ரூபா 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 13 27 - 05 - 1994 வெள்ளிக்கிழமை ஓசை 98

### வடபகுதியில் இருந்து

## வெளியே சென்று வரும் பயணிகள் கவனத்திற்கு

வட பகுதிக்கு வெளியே செல்பவர்கள் மீளவும் வட பகுதிக்குள் வரும்போது வவுனியா சோதனை நிலையம், பருத்தித்துறை இறங்குதுறை, மன்னார் விடத்தல் தீவு சோதனை நிலையம் என்பவற்றில் எப்பகுதியூடாக வடபகுதிக்குள் நுழைந்திருப்பினும் அவ்விடங்களில் வழங்கப்பட்ட வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனும

(11ஆம் பக்கம் பார்க்க)

# புல்மோட்டையில் அதிரடி 5 இராணுவத்தினர் பலி

## உழவு இயந்திரமும் தகர்ப்பு

(திருமலை)

**திருமலை மாவட்டத்தில், புல்மோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதி எனக் கூறப்படும் பகுதிக்குள் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். படையினர் பயணம் செய்த உழவு இயந்திரமும் புலிகளால் தகர்க்கப்பட்டது.**

நேற்றுக் காலை 8.00மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது. புல்மோட்டை ஏழாம் கட்டை என்னும் பகுதியிலேயே புலிகள் இத் துணிகர அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

புலிகளின் இத் தாக்குதலை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்ததாக பி.பி.ஸி தெரிவித்தது. ஐந்து பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

(11ஆம் பக்கம் பார்க்க)

### இளைஞர் படுகாயம்

அராலிக் கடற்பகுதியில் சிறிலங்காப் படையினர் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று இரவு நடைபெற்ற இச் சம்பவத்தில் சுளிபுரம் மேற்கைச் சேர்ந்த ரி. செந்தில்குமார் (வயது23) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். இவர் சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பிரச்சினைக்கான தீர்வை சு. கட்சி முன்வைக்கும்

### தீர்வுத்திட்டம் தீவிர பரிசீலனையில்

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை வகுப்பதற்கென சிறிலங்காசுதந்திரக்கட்சியால் நியமிக்கப்பட்ட குழு தீவிரமாக ஆய்வுகளை நடாத்தி வருவதாகவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்படும் என அக் குழுவின் தலைவரான ஜி. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைப்பு விவகாரத்தில் முக்கிய பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரியவருகிறது. கிழக்கு மாகாணத்திலிருந்து

(11ஆம் பக்கம் பார்க்க)

#### சுற்றிவளைத்த படையினருடன்

## தேற்றாத் தீவில் மோதல் 3 புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

கடந்த 22ஆம் திகதி காலை 6.30 மணியளவில் மட்டக்களப்பு தேற்றாத்தீவுக் கிராமத்தை விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்த போது இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் மூன்று போராளிகள் வீரசாவைத் தழுவிக் கொண்டனர்.

லெப், யுதன் (கணபதிப்பிள்ளை மனோகரன்) மட்டக்களப்பு, 2-ம் லெப்- குருதேவன்/தவராஜ் (வேல்நாயகம் மனோரஞ்சிதன்) அம்பாறை வீரவேங்கை கேதீஸ்/பொட்டு (செல்லத்துரை புனிதராஜ்) மட்டக்களப்பு ஆகிய போராளிகளேவீரச்சாவைதழுவினர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## வலி. மேற்கு நோக்கி அகோர பீரங்கி தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகுகள் வலிகாமம் மேற்குப் பகுதிகளை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதலை நடத்தின.

நேற்றுக்காலை 9.00 மணியிலிருந்து நண்பகலின் பின்பு வரை கடற்படையினர் இப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

இதேசமயம் காரைநகர் தரைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ச்சியான 50 கலிபர் தாக்குதலை நடத்தினர்.

## வாகரையில் போராளி வீரச்சாவு



கடந்த 23ஆம் திகதி இரவு 10-10 மணியளவில் வாகரை தட்டுமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

லெப். குலசேகரம்/ ஜோன் [குமாரலிங்கம்ரவி] அம்பாறை என்ற போராளியே வீரச்சா

[11ஆம் பக்கம் பார்க்க]

## தேர்தல் பிரசாரத்திற்கு சந்திரிகா பொறுப்பு

[கொழும்பு]

எதிர் வரும் தேர்தல்களின் போது பொதுஜன ஐக்கியமுன்னணியின் தேர்தல் பிரசாரத்திற்கு மேல்மாகாண முதல்அமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்கா நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சியால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இவர் சகல மாவட்டங்களிலும் நடைபெறும் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவார் என்றும் தென் மாகாண சபை தேர்தலின் போது பிரசார நடவடிக்கையை இவர் முன்னின்று நடத்தியதாலே தேர்தலில் வெற்றி கிடைத்ததாகவும் இதற்காகவே இவர் இதற்கு நியமிக்கப்பட்டார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவை மாற்றம் 10 நாள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அமைச்சரவையின் முக்கிய பதவியான நிதி அமைச்சர் பதவியில் தொடர்ந்தும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா இருப்பார் என்று தெரியவருகிறது.

தேசியப் பட்டியல் எம். பிகள் சிலர் ராஜினாமா செய்யத் தயங்குவதை அடுத்து அமைச்சரவை மாற்றம் பத்து நாள்களுக்குப் பிற் போடப்பட்டுள்ளதாக ஐ. தே. க. வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர். தேசியப்பட்டியல் எம். பிக்களைப் பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு அதிகாரம் இருப்பதாகக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்தார்.

# குடத்தனைப் பகுதிமீது விமான குண்டுவீச்சு கப்பல்களில் இருந்து பீரங்கித் தாக்குதல்

### இரவு நேரத் தாக்குதலால் மக்கள் மத்தியில் பதற்றம்

வடமராட்சி கிழக்கில் கடந்த சில நட்களாக கடற்படை மற்றும் விமானப்படைகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன இதனால் இப்பகுதிகளில் பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

இக்கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான மூன்று கப்பல்கள் சில நாட்களாகத் தரித்து நிற்கின்றன இக் கப்பல்கள் குடத்தனை கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடாத்தி வருகின்றன.

இம் மூன்று கப்பல்களில் ஒன்று வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் தரித்து நின்று தாக்குதல்களைமேற்கொண்டு வருகின்றது ஏனைய இரு கப்பல்களும் இக் கடற் பிராந்தியத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் அதே வேளை ஆங்காங்கே பீரங்கித்தாக்குதல்களையும் மேற்கொண்ட வண்ணம் உள்ளன.

இதே வேளை நேற்றுக் காலை 6-15 மணிமுதல் 7-00 மணிவரை கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதல்களினால் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இராணுவ நடவடிக்கை காரணமாக வெற்றிலைக்கேணியிலிருந்து இடம்பெயர்ந்து குடத்தனையில் வசித்து வந்தவரான மரிய நாயகம ஜேசுதாஸ் (வயது 20) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை குடத்தனைப் பகுதி மீது சிறிலங்கா விமானப் படையின் 'புக்காரா' குண்டு வீச்சு விமானம் பலத்த குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது இப்பகுதிக்கு ஆறுமணிக்கு வந்த புக்காரா விமானம் முதலில் மூன்று குண்டுகளை வீசியது பின்பு பலதடவைகள் வானில் வட்டமிட்ட பின் நான்கு குண்டுகளை அடுத்தடுத்து வீசியது

[11ஆம் பக்கம் பார்க்க]

# புதிய புதிய உபகரணங்களை மாணவர்கள் உருவாக்க வேண்டும்

-கரிகாலன்

(யாழ்ப்பாணம்)

சமுதாயத்திற்குத் தேவையான புதிய புதிய தொழில்நுட்ப உபகரணங்களை மாணவர்கள் உருவாக்க வேண்டுமென தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு: கரிகாலன் தெரிவித்துள்ளார்

பளை மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உயர்தர மாணவர்களின் ஒன்று கூடலில் கௌரவ விருந்தினராக திரு: கரிகாலன் கலந்து கொண்டார்

மாணவர்கள் மத்தியில் அவர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

புதிய புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்குவதன் மூலம் அறிவியலாளர்களாக, புத்திஜீவிகளாக, துறைசார் நிபுணர்களாக மாறி எமது தேசத்தை வளம் படுத்த வேண்டுமென்பதே தேசியத் தலைவரின் அவாவாகும்.

இன்று ஒரு சில கண்டு பிடிப்புக்கள் எமது சமுதாயத்தில் உருவாக்கப்பட்டுள்ளன இன்னும் புதிய புதிய தொழில்நுட்ப உபகரணங்களை உருவாக்க வேண்டுமெனவும் திரு கரிகாலன மாணவரிடையே தெரிவித்தார்

# அரசசார்பற்ற நிறுவனங்கள் அலுவலகம் திறக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் செயல்பட்டு வரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சில யாழ்ப்பாணத்தில் காரியாலயங்களை திறந்து செயற்பட வைப்பதற்கு முயற்சி செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக ஆரம்பித்துள்ள சில நிறுவனங்கள் உலக நிதி நிறுவனங்களிடமிருந்து பெரும் தொகை நிதியை பெறும் நோக்கிலேயே இம்முயற்சியில் இறங்கியிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நிறுவனங்களின் பிரதிநிதிகள் சிலர் யாழ்ப்பாணத்தில் காரியாலயங்களை திறந்து செயற்பட வைக்கும் முன்னோடி நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் தமது நிறுவனங்களின் பெயரையும் பதிவு செய்து கொள்ள முயன்றது பயனளிக்காது போய்விட்டது எனவும் கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் காரியாலயம் திறந்து செயல்பட வைப்பதன் மூலம் உலக நிதி நிறுவனங்களின் நிதியை பெருமளவில் பெறுவதோடு அப்பணத்தை வெவ்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துவதே அந்த நிறுவனங்களின் நோக்கம் என்று மேலும் சொல்லப்பட்டது. (தி, சி)

## பொதுஜன ஐக்கிய முன்னணி

# பட்டியலில் போட்டியிட லலித் குழுவினர் முடிவு

எதிர்வரும் தேர்தல்களின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் வேட்பாளர் பட்டியல் மூலமே தமது கட்சி போட்டியிடப் போவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தற்போது சுதந்திரகட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு இக்கட்சி கடிதம் எழுதியிருப்பதாக சுதந்திர கட்சி பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்,

இவ்வாறு இணைந்து போட்டியிடுவதற்கான முடிவை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் குழுவினர் தனது செயற்குழு கூட்டத்தின் மூலம் எடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனநாயக ஐக்கிய முன்னணியின் லலித் அணி பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைவது தொடர்பாக பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதன் பேச்சாளர் பி. பி. சி. சிங்கள சேவைக்கு தெரிவித்துள்ளார்

அடுத்த பொதுத் தேர்தல் மற்றும்ஜனாதிபதி தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக பாரிய நெருக்கடியொன்றை வழங்கும் நோக்குடன் இவ்வாறு தாம் இணைவதாகவும் பல முக்கிய சிக்கல் வாய்ந்த கொள்கை முரண்பாடுகள் தொடர்பாக தற்போது விரிவாக ஆராய்ந்து வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சி சமசமாஜ கட்சி போன்றவற்றின் வர்க்க பொருளாதார கொள்கையை மாற்றுமாறு வற்புறுத்தபட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

## வரி விளம்பரம்

### இறைச்சிக் கோழி விற்பனை.

புறொயிலர் கிலோ 160. இறைச்சிக் கோழிகிலோ 150- சனி, ஞாயிறு, காலை 8.00 மணி முதல் 11. 00 மணி வரை சுத்தம் செய்து கொடுக்கப்படும் (28/5,29/5 மட்டும்)சென்ற் ஜுட்மோட்டேர்ஸ் (வெலிங்டன் சந்தி) 382 மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். (8394)

### தவறிவிட்டது

21-05-94 அன்று ஓமந்தைக்கும் கிளிநொச்சிக்குமிடையில்க. குணபூசனியம்மா தாவடி வடக்கு, கொக்குவில் (இல. 435560245V) என்பவருடைய அடையாளஅட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8397)

### ராகு,கேது மாற்றமும் குரு வக்கிரமும்

பெண்களின் ருது பலன்களும் ரூ. 10/- எங்கும் விற்பனையாகின்றது. (நூலாசிரியர் சத்யா) 24 மணித்தியால மருந்தக சேவைக்கு ஒரே நிறுவனம்: பகவான் மருந்தகம் 221 நாவலர்வீதி, யாழ்ப்பாணம் (8396)

### பாம் போஷா

குடும்பத்திலுள்ள சகலருக்கும் ஏற்ற தரமான சத்துணவு பாம்போஷா ப. அ. சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனையாகின்றது. (சி-9332)

### விற்பனைக்கு

ரெமிங்டன் தமிழ் தட்டச்சு இயந்திரம் மற்றும் ஆங்கில தட்டச்சு இயந்திரம். விற்பனைக்குண்டு: தொடர்பு: இ. மருதலிங்கம்,8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (8399)

### தவறிவிட்டது

ச: இராஜேஸ்வரன் என்பவரின் அடையாள அட்டையும் (இல 641332526 V), வியாபாரச் சான்றிதழும் யாழ் மாநகர எல்லைக்குள் தொலைந்துவிட்டன: இதனைக் கண்டெடுத்தவர்கள் புதிய பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகிலுள்ள கண்ணன் மண் உற்பத்தி நிலையத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும்; (8401)

## சுற்றுநிருபமும், விண்ணப்பமும்

# மருந்து கலவையாளருக்கு தனிச் சிங்களத்தில் வந்தன

கொழும்பில் உள்ள சுகாதார திணைக்களத்தின் தலைமைச் செயலகம் யாழ் மாவட்டத்தில் உள்ள மருந்துக் கலவையாளர்களுக்கு ''மருந்துக் கலவையாளருக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை தரம் மூன்றிற்கான'' சுற்று நிருபத்தையும், விண்ணப்பப்படிவத்தையும் தனிச் சிங்கள மொழியில் மட்டும் அனுப்பி வைத்துள்ளது. இதனை வட பகுதி மருந்துக் கலவையாளர் சங்கம் ஆட்சேபித்துள்ளது.

இவ் வருடத்திற்கான மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு கடந்த 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க வேண்டுமென்றும் அச் சுற்று நிருபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பத்தை அனுப்ப போதிய கால அவகாசம் கிடைக்கவில்லை எனவும் யாழ். மாவட்ட ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது [24]

## மைலாப்பூர், பெருந்துறை இடைத் தேர்தல்

# அதிமுக ஆள் மாறாட்டம்; எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

[சென்னை]

தமிழ் நாட்டில் இரு சட்டசபை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நேற்று நடைபெற்ற போது, ஆளும் கட்சியினர் பெருமளவில் ஆள் மாறாட்டம் செய்து வாக்களிக்க முயன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது-

மயிலாப்பூரிலும், பெருந்துறையிலும் சட்ட சபைக்கான இடைத்தேர்தல் நேற்று நடைபெற்றது-மயிலாப்பூரில் 55சதவிகித வாக்குகளும், பெருந்துறையில் 60 சதவிகித வாக்குகளும் பதிவாகியிருந்தன என அறிவிக்கப்பட்டுள்ளது-

மயிலாப்பூரில் ஆள்மாறாட்டம் செய்து வாக்களிக்க முயன்ற 5 பேர் கைது செய்யப்பட்டனர்-

ஆளும் கட்சியினர் பெருமளவில் கள்ள வாக்கு போட முயல்வதாகக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவிகும் வகையில் சட்டப் பேரவை எதிர்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்ரமணியமும் காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர் சிலரும், மயிலாப்பூர்காங்கிரஸ் வேட்பாளரும் மறியலில் ஈடுபட்டனர்- இதனால் அப் பகுதியில் பதற்றம் நிலவியது என்றும் தெரிவிக்கப்பட்டது-

மயிலாப்பூரில் ஆளும் கட்சியினர் ஆள் மாறாட்டம் செய்தது பற்றியும், கள்ள வாக்கு அளிக்க முயன்றதும் பற்றியும் தேர்தல் ஆணையாளர் சேஷனுக்கு தந்தி அனுப்பியிருப்பதாக திரு- பாலசுப்ரமணியம் தெரிவித்துள்ளார்-

# நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த பட்டதாரிப்பயிற்சி நேர்முகப் பரீட்சை பின்போடப்பட்டுள்ளதாக யாழ் செயலக திட்டமிடல் பணிமனை அறிவித்துள்ளது.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சிலிருந்து நேர்முகப் பரீட்சை வழிகாட்டல்கள் இன்னும் கிடைக்காமையினாலேயே இந் நேர்முகப் பரீட்சை பின் போடப்பட்டுள்ளதாகவும் புதிய திகதி

(11 ஆம் பக்கம் பார்க்க)

# நினைவு கூருகின்றோம்...
## 27.05.1994

1982ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - தெல்லிப்பழையில் தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப் பற்றாளர்களான,

**மரநிருமசிங்கம் இறைகுமாரன்** (அளவெட்டி - யாழ்)

**சிவபாலசிங்கம் உமைகுமாரன்** (அளவெட்டி - யாழ்)

1985ஆம் ஆண்டு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கையில் அநுராதபுரம், புத்தளம் வீதியில் சிறிலங்காப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்ட 02 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய

**முரளி** (நவரத்தினம் ஜெயக்குமார் - செல்வநாயகபுரம் - திருமலை)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய,

**ஹசன்** (......முத்தையன்கட்டு - முல்லைத்தீவு)

வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் 2ஆவது நாளாக மேற்கொண்ட ஒபறேசன் லிபறேசன் நடவடிக்கையின்போது தொண்டமானாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**ஆசன்** (இராசையா உதயகுமார் - ஒட்டிசுட்டான்- முல்லைத்தீவு)

இதே நடவடிக்கையின்போது வல்வெட்டித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப. யூசி** (செல்லச்சாமி பிறேமானந்தன்- வல்வெட்டித்துறை - யாழ்)

இதே நடவடிக்கையின்போது கம்பர்மலைப் பகுதியில் விமானப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 27 தமிழர்கள்

யாழ் - தெல்லிப்பழையில் சிறிலங்கா இராணுவத்தினர் ''அம்புலன்ஸ்'' வண்டி ஒன்றின்மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அம்பாறை - காரைதீவுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைதாகி தேசவிரோத சக்திகளினால் அடித்துக் கொலை செய்யப்பட்ட

**றொசான்** (உலகசேகரம் பத்மநாதன் - காரைதீவு - அம்பாறை)

இதே ஆண்டு அம்பாறை - காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**நேசன்** (......காரைதீவு - அம்பாறை)

**விஜி** (......திருமலை)

சாவகச்சேரி - சங்கத்தானை, சப்பச்சிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**புறொய்லர்** (சிவயோகராசா குணராசா - கச்சாய் தெற்கு - கொடிகாமம்)

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் இந்தியப் படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**செந்தூரன்** (உமாபதி சத்தியகுமார் - 315, மணிக்கூட்டு வீதி, - யாழ்)

மட்டு - ஆரையம்பதிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரஜைகள் குழுத் தலைவர்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9522)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# காமினியின் எழுச்சியால் இனப்பிரச்சினையில் அரசாங்கத்தின் நிலைப்பாடு மாறுமா?

ஒரு புறம் ஆண்டு இறுதியில் ஜனாதிபதித் தேர்தல், மறுபுறம் ஆளும் கட்சிக்குள் குழப்பம் மாற்றங்கள் இன்னொரு புறம் பெரும் எதிர்ப்பிலான இராணுவ முஸ்தீபு. இந்த நிலையில், இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கத்தின் இன்றைய நிலைப்பாடு என்ன என்பது பற்றிப் பொதுவாகவே கேள்வி எழுவது நியாயமானது. இதற்கு ஏற்றாற்போன்றே அரசியல் இராணுவச் சூழ்நிலையும் உள்ளது என்றே கூறலாம்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்தசில மாதங்களாக ஒரு மந்த நிலையே காணப்படுகின்றது. இதற்கு அரசாங்க மட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி மட்டத்திலும் நிலவுகின்ற குழப்ப நிலையே காரணம் என்பதில் சந்தேகமில்லை: இக்குழப்ப நிலையானது, அரசாங்கத்தை இனப்பிரச்சினை விவகாரத்தில் முன்னும் பின்னும் நகர முடியாமல் செய்துள்ளது எனவே பரவலாகக் கருதப்படுகின்றது.

## தயார் நிலையில் இராணுவம்

அண்மையில் சிறிலங்கா இராணுவ அதிகாரி வடபகுதியைச்சேர்ந்த பிரமுகர் ஒருவரிடம் பேசும்போது "நாங்கள் தாக்குதலுக்கு தயார் செய்துவிட்டோம் அரசாங்கத்தின் அனுமதி எப்போது கிட்டுமோ அப்பொழுது தாக்குதலைத் தொடங்குவோம். அரசதரப்பில் இருந்துதான் அனுமதி வருவதில் தாமதம் உள்ளது" என்று கூறினாராம்.

இராணுவ அதிகாரியின் இக்கூற்று முற்றிலும் சரியானதே. சிறிலங்கா இராணுவத் தலைமை யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதலுக்கான திட்டத்தை ஜனவரிமாத இறுதி அளவிலேயே தயாரித்து முடித்திருந்தது. ஆயினும் பெருமளவில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதத் தளபாடங்கள் வந்து சேராமையினாலும், மேலும்பல ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டி இருந்தமையினாலும், தாக்குதலுக்கு சிறிதுகாலம் தேவை எனப் பொறுத்திருந்தது

இதேசமயம் ஜனாதிபதி டி பி விஜேதுங்காவும் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வுதான் முடிந்த முடிவு என்ற நிலைப்பாட்டில் தெளிவாகவே இருந்தார். இதன் காரணமாக கடந்த வருடத்தின் இறுதியிலும் இவ்வருட ஆரம்பத்திலும் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளை அவர்முற்றாகவே நிராகரித்திருந்தார்

இதன் காரணமாக பல மதஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும், வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வி கண்டன என்பதோடு, எவரும் சமாதான முயற்சிகள் மேற்கொள்வது அர்த்தமற்ற வேலை என்ற நிலைப்பாட்டிற்கும் வந்தனர். சில சமாதான முயற்சிகளுக்கு டி. பி. விஜேதுங்கா நேரடியாகவே முட்டுக்கட்டையும் போட்டார்.

இதில் சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர் எம் எச்.முகமட்டின் முயற்சிகளை அரசு தடுத்து நிறுத்தியமையும், கனடாநாட்டு அமைப்புகள் சிலவற்றுடன் சேர்ந்து சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அரசு முட்டுக்கட்டை போட்டமையும் முக்கியமானவையாகும், இந்தவகையில் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்விற்கான வழிகள் முழுமையாக அரசால் அடைக்கப்பட்டது என்றே கூறமுடியும்.

இதேசமயம் பெப்ரவரிமாத இறுதியிலும் மார்ச் மாத முற்பகுதியிலும் கணிசமான தொகை ஆயுதங்கள் வெளிநாடுகளில் இருந்து சிறிலங்கா இராணுவத்தின் கைக்குவந்தும் சேர்ந்தன: இவற்றில் பெரும்பகுதி வடபகுதிக்கு அனுப்பப்பட்டும் இருந்தன. அதாவது மார்ச் மாத முற்பகுதியில் இராணுவம் தாக்குதலுக்கு ஓரளவு தயார் நிலையில் இருந்தது.

## முதல் குழப்பம்

இவ் வேளையில்தான் அரசாங்கத் தரப்பில் முதற்குழப்பம் ஏற்பட்டது. தென்மாகாணசபை தேர்தலுக்கு முன் தாக்குதலா? தேர்தலுக்குப் பின் தாக்குதலா? என்ற ரீதியில் இது உருவானது இறுதியில் தேர்தல் லாபம்கருதி, தேர்தலின்பின் தாக்குதல் என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

ஆயினும் தேர்தல் ஐ. தே. கட்சி எதிர்பார்த்தமாதிரி அமையவில்லை. ஆளும்கட்சி தென்மாகாண சபையில் தோல்விகாண இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என அரசாங்கம் தேர்தலில் முன்வைத்த கொள்கையும்கேள்விக்குள்ளானது. இந்நிலையில் அரசாங்கம் விருப்பமின்றியே இராணுவ தாக்குதலை ஒத்தி வைக்க வேண்டிவந்தது. அதேநேரம் வடபகுதி மீதான தாக்குதலுக்கு முழு அளவில் இராணுவத்தை தயார்படுத்துமாறும் இராணுவத்தலைமைக்கு உத்தரவும் இட்டது.

இந்நிலையில் இராணுவத் தலைமை யுத்தத்திற்கான முழு அளவில் ஏற்பாடுகளையும் செய்தது. கிழக்கு மாகாணத்தில் இருந்து சுமார் 12000 துருப்புக்கள் வடக்கே அனுப்பப்பட்டன. சுமார் 70000 துருப்புக்கள் வடபகுதியில் எந்நேரமும் தாக்குதலுக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டன. அதேசமயம் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களில் பெரும்பகுதி கொழும்புவந்து சேர்ந்ததோடு,



80 வீதத்திற்கு மேற்பட்ட தளபாடங்களும் வடக்கே அனுப்பப்பட்டு இருந்தன.

## ஐ. தே. க. நெருக்கடியும் காமினியும்

இவ்வாறாக இராணுவம் எந்நேரத்திலும் தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் தான் ஐ. தே கட்சிக்குள் பெரும் அரசியல்நெருக்கடி உருவாகியது. காமினி திசாநாயக்காவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குதல் தொடர்பாக எழுந்த இப்பிரச்சினை கட்சியின் செயலாளர் சிறிசேன கூரே பதவி விலகுதல் வரையில் சென்றது- ஆயினும்அதன்பின்னரும்கட்சிக்குள் எழுந்த நெருக்கடி முற்றாகத் தீர்ந்தபாடு இல்லை.

இந்நிலையில் தான் இனப்பிரச்சினை விவகாரத்திலும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் குழப்ப நிலை உருவானது- இக்குழப்பநிலை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை என்பதை விட டி பி விஜேதுங்கா தனது அரசியல் தளத்தை விஸ்தீரணப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் காரணமாக உருவானது என்று கூறுதலே பொருத்தமானதாகும்

இருப்பினும் காமினி திசாநாயக்காவின் பாராளுமன்றப் பிரவேசமும் அவரது பேச்சுக்களும் இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் கொண்டு வருமா என்பது குறித்து பலமானதொருகேள்வியை தற்பொழுது எழுப்புகின்றது- இதற்குகாரணம்இல்லாமலும் இல்லை

இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என உரக்கப் பேசிவந்த சிறிலங்கா ஜனாதிபதி டி பி விஜேதுங்கா தற்பொழுதுஇதுபற்றி தணிந்தகுரலில் பேசும் பொழுது எம்மைப் போன்ற நாடுகளுக்கு யுத்தச் செலவு வீண்விரயமானது, வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என காமினி திசாநாயக்கா கூறுவது அரசின் இன்றைய கொள்கை மாற்றத்தைக் குறிப்பவையா என்பது குறித்து எண்ணவைக்கின்றது

இவ்வருட இறுதியில், ஜனாதிபதித் தேர்தலும், அடுத்த வருட ஆரம்பத்தில் பாராளுமன்றத் தேர்தலும் நடைபெற வேண்டியுள்ளதினால் இனப்பிரச்சினை குறித்து ஐ தே க அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. இந் நிலைப்பாடானது பொதுவில் பெரும்பான்மை சிங்களவர்களுக்கு வெறுப்பூட்டாததாகவும், அதேவேளை சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தரக் கூடியதாகவும் இருத்தல் விரும்பத்தக்கதாகும்.

இந்நிலையில் டி பி விஜேதுங்காவைப் பொறுத்து இராணுவத் தீர்வு விருப்பத்திற்குரியதாக இருக்கலாம்- ஆனாலும் அது வாக்குகளைப் பெற்றுத் தருமா என்பதில் தற்பொழுதுசில கேள்விகள் எழுந்துள்ளன ஏனெனில், வெல்லமுடியாதபோர்என்றுதெரிந்தும் பெருமளவில் பணமும், உயிர்களும் பறிகொடுக்கப்படுவதாக சிங்களவர்களில் ஒருதரப்பினர் கருதத் தொடங்கியுள்ளனர். முக்கிய எதிர்த்தரப்பான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வே வழி எனப் பேசத் தொடங்கியுள்ளது. அதே சமயம் இராணுவத் தீர்வின் முழுமையான வெற்றி கிடைக்கும் என்ற உறுதிப்பாடும் இல்லை.

ஆகையினால் டி பி விஜேதுங்கா தனது விருப்பத்திற்குரிய நிலைப்பாட்டை மேற்கொள்வதில் சிலதடங்கல்கள் காணப்படுவதாகவேஉள்ளது இந்நிலையில்தான் காமினி திசாநாயக்காவின் வருகையுடன் இணைத்து இனப்பிரச்சினை தொடர்பாக அரசின் கொள்கையில் மாற்றம் உள்ளதா என சிந்திக்கவேண்டியுள்ளது பாராளுமன்றப் பதவிகிடைக்கும் முன்னதாகவே காமினி திசாநாயக்கா இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசத்தொடங்கியமையும் அவருக்கு பாராளுமன்றப்பதவி வழங்கப்பட்ட போது இனப்பிரச்சினை தொடர்பான தீர்வில் அவர் அக்கறை காட்டுவார் என வெளிவந்த தகவல்களும் இங்கு சுட்டிக்காட்டக் கூடியவையாகும்.

## காமினியும் இனப்பிரச்சினையும்

அத்தோடு, காமினிதிசாநாயக்காவின் வருகையுடன் இனப்பிரச்சினை தீர்வில் ஓர் புதிய அணுகுமுறை ஏற்படலாம் என்பதற்கு அவரின் கடந்தகால செயற்பாடுகளும் சில காரணங்களாகவுள்ளன. இதில் முக்கியமானது இந்திய சிறிலங்கா சமாதான உடன்பாடு உருவாவதற்குக் காரணமாக இருந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியுடன் நெருக்கமான உறவை காமினிகொண்டிருந்ததோடு, இந்திய - சிறிலங்கா உடன்பாட்டை எவ்வேளையிலும் ஆதரித்து வந்தவராகும். ஐதேகவிற்குள் பூசல் ஏற்பட்டு வெளியேறிய பின்னரும் இவ் விடயத்தில் காமினி திசாநாயக்கா தனது நிலைப்பாட்டை மாற்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ் உடன்படிக்கையில்சிறிலங்கா தரப்பில் கையொப்பம் இட்ட முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா 'சிறிலங்கா - இந்திய உடன்படிக்கை வெறுமனே இவ்விரு நாடுகளும் மேற்கொண்ட ஆலோசனைகளாகும்இதனைவிரும்பினால்நடைமுறைப் படுத்தலாம். இல்லை எனில் கைவிடலாம்'' எனத் தெரிவித்த போதும் காமினி திசாநாயக்கா இவ் உடன்படிக்கையை இதுவரையில் பாதகமாக விமர்சித்ததோ அன்றி புறக்கணித்ததோ இல்லை. தொடர்ந்தும் ஆதரித்துப் பேசியே வருகின்றார்.

ஐ. தே. கவில் கடந்த ஜனவரியில் மீண்டும் இணைந்து கொண்டபோது, காமினி திசாநாயக்கா சென்னையில் இருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ''இன்றுவரை சிறிலங்கா - இந்திய சமாதான உடன்படிக்கை தமிழருக்கு இருக்கும் குறைகளைத் தீர்க்கும் நோக்கில் பெருமளவில் வென்றிருக்கின்றது'' எனத் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர், இம்மாத மத்தியில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரும். இந்திய - சிறிலங்கா உடன்பாட்டிற்கு சாதகமாகப் பேச அவர் தவறவில்லை. இதேசமயம், இனப்பிரச்சினை தொடர்பாக அவர் தனது நிலைப்பாட்டை டி பி. விஜேதுங்காவிடம் வலியுறுத்தி வருவதாகவும், ஒருவகையில் டி.பி விஜேதுங்காவிடம் அவர் வெற்றி பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## இனப்பிரச்சினையில் கொள்கை மாற்றம்?

ஆனால், காமினிதிசாநாயக்காவின் வருகையுடன் இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசிடம் ஒரு கொள்கை மாற்றம் ஏற்படுமானாலும் அது இன்றைய அரசியல், இராணுவச் சூழ் நிலைகளினாலேயே தீர்மானிக்கப்பட முடியும் 1987 ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையை காமினி திசாநாயக்கா முழுமையாக ஆதரித்திருப்பினும்அதேவடிவில்அதாவது இந்திய இராணுவத்தின் துணையுடன் இப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து சிந்திப்பதில் பல இடர்பாடுகள் உள்ளன.

முதலாவதாககாமினிதிசாநாயக்கா இவ்விடயத்தில் டி-பி விஜேதுங்காவை ஓரளவு திருப்திப்படுத்தக் கூடியதாக இருப்பினும், இவ்விவகாரம் ஐ. தே கட்சிக்குள் இன்றுள்ள பிரச்சினையை மேலும் தீவிரமாக்குமே தவிர குறைவதற்கு வாய்ப்பு எதுவுமில்லை.

இதேசமயம் இன்று வீங்கிப் பெருத்துப் போயுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் இதனை ஏற்றுக் கொள்வார்களா என்பதும்கேள்விக்குரியதே. ஏனெனில் இன்று பல நவீன இராணுவத் தளபாடத்தைப் பெற்றுக் கொண்டுள்ள இராணுவம் தாம் தனியாகவே போரிட விரும்புகின்றது கடந்த வருடத்தில் பல தோல்வியைச் சந்தித்த இராணுவம் ஒரு வெற்றி பெற்றாக வேண்டும் என்பதில் குறிப்பாகவே உள்ளது.

**ஜெயராஜ்**

இதற்கும் மேலாக இந்திய அரசாங்கமும் இலங்கை வடக்கு-கிழக்குப் பிரச்சினையில் இன்று நேரடியாகத் தலையிடும் என்று கூறுவதற்கு அரசியற் சூழ்நிலை இருப்பதாக இல்லை. உள்நாட்டுப் பொருளாதாரச் சீர்திருத்தங்களில் தீவிரமாகக் கவனம்செலுத்தும் இந்திய அரசு, இனப் பிரச்சினைவிவகாரத்தில்தற்பொழுது ஒரு அவதானிபோன்றே இருந்து வருவதாகத்தெரிகிறது.

அதிலும் காஷ்மீரில் பல லட்சம் இராணுவத்தைக்குவித்து வைத்துள்ள இந்திய அரசோ அன்றி இராணுவமோ மீண்டும் இலங்கை வந்து மேலும் ஒரு உள்நாட்டுப் போரை எதிர்கொள்ள தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் உள்நாட்டுப் போர்களினால் இந்திய சிப்பாய்கள் சலிப்படைந்து விட்டதாக இந்திய இராணுவ அதிகாரிகள் சலிப்புடன் தெரிவிக்கத் தொடங்கிவிட்டனர்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் தலையீடு என்பது இன்றைய அரசியற்சூழலிலும் உலகின் இன்றைய போக்கிற்கும் ஏற்றவாறே இருக்கும் எனக் கருதப்படுகின்றது, இதனைக் காமினியும் புரிந்து கொள்ளாமல் இருக்கமாட்டார். இந் நிலையில், காமினி திசாநாயக்கா

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காய் வேம்பிராயில் புலிகளின் எழுச்சிப்பாசறை

நானூறு ஆண்டுகளாக அடக்குமுறைக்கு உள்ளாகி வாழ்ந்து வந்த ஓர் சமூகம் இன்று விழிப்படையத் தொடங்கிவிட்டது.

அடக்கி ஆளப்படும் இனம் தான் அடக்கப்படுவதை உணர்ந்து அந்த அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடத் தொடங்குமானால் அந்த தாகத்தை எவருமே தடுத்து நிறுத்திவிட முடியாது என்பது போல் கொத்தடிமைகளாக கை கட்டி வாய் பொத்தி சேவகம் செய்து வந்த ஓர் சமூகமே இன்று விழித்துக் கொண்டது.

இச்சமூகத்தினர் செருப்பு அணிவதும், ஆண்கள் சேட் அணிவதும், பெண்கள் மேற் சட்டை அணியவும் கிணறுகளில் நீர் அள்ளவும் ஏன் கோவிலுக்குச் சென்று வழிபடக்கூட இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இவற்றுக்கெல்லாம் மேலாக பாடசாலைகளுக்குச் சென்று கல்விகற்கக் கூட இந்தச் சமூகத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. சேவகம்செய்யும்போது விடும் ஒரு சிறு தவறுக்காக இவர்கள் மரத்துடன் கட்டி வைக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர். இவர்கள் தமக்குபிறக்கும் குழந்தைகளுக்கு பெயர் வைப்பதற்குக் கூட மற்றவர்களையே நம்பியிருந்த அவல நிலை.

இவை ஐம்பதுகளில் யாழ். குடாநாட்டில் நடைபெற்றவையல்ல எழுபதுகளின் ஆரம்பம் வரை யாழ். குடாநாட்டின் ஒரு மூலையில் நிகழ்ந்து கொண்டிருந்த கொடுமைகள்.

'வேம்பிராய்' என அழைக்கப்படும் அந்தக் கிராமம் சுன்னாகம் - புத்தூர் வீதியில் புத்தூர் சந்தியிலிருந்து முந்நூறுயார் தொலைவில் தெற்கு பபுறமாக அமைந்துள்ளது. புத்தூர் மேற்கு சிறுப்பிட்டி மேற்கு கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ள இந்த கிராமம் தான் இவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தது.

பிரதான வீதியையும் இந்தக்கிராமத்தையும்இணைத்து நிற்கிறது நீகன் வீதி கரடு முரடான கற்பாறைகள் நிறைந்த நெளிந்து வளைந்து நிமிர்ந்து செல்கிறது அந்த வீதி இடதுபுறம் ஆளுயரக்குடிசைகளும் வலதுபுறம் சிறு பற்றைக் காணிகளாகவும் காணப்படும் பகுதியூடாக செல்லும் அந்த வீதியால் சென்றால் அழகிய சிறுவர்கள் அழுக்குப் படிந்த உடைகளுடன் ஆரவாரமாய்க் காட்சி தந்தார்கள். மேலாடை கீழாடையெல்லாம் ஒராடையாக சாரத்தைத் தோள் வரை போர்த்திய வண்ணம் உலாவரும் சிறுவர்களும் நீல நிறக் காற்சட்டை அவ்வூர்செம்மண் கலராய் தோற்றமளிக்க நிலத்தில் உருண்டு பிரண்டு விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களையே காணமுடிந்தது.

நிலவுடைமையற்றகூலிஉழைப்பாளர்களான மக்களைக் கொண்ட மிகவும் பின் தங்கிய இக்கிராமம் சமுதாயத்தின் சகலதுறைகளாலும் புறக்கணிக்கப்பட்டு சாதி அடக்கு முறையின் கொடூரத்தால் அமுக்கப்பட்டு நாகரிக மனிதர் என்று தம்மைத்தாமே பாவனை செய்யும் சிலரின் முகச்சுழிப்பைப் பெற்றுக்கொண்ட இக்கிராமத்திற்கு வேம்பிராய் என்ற பெயர் எவ்வாறு வந்ததென்றே எவருக்கும் தெரியாதிருந்தது. ஆங்காங்கே காணப்பட்ட ஒலைக்குடிசைகளுக்குள் இவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் இவர்களது வீடுகளை சூழவேலிகள் அடைப்பதற்குக்கூட தடை போடப்பட்டிருந்தது.

1972 வரை இவ்வாறே வாழ்ந்து வந்த இந்த இனம் விழிப்படையத் தொடங்கியது இளைஞர்களதுவிழிப்பால் அந்தக்கிராமத்தில் புதியதொரு திருப்பு முனை தோன்றியது. சிந்திக்கத் தொடங்கியவர்கள் அடக்கு முறையாளர்களுக்காகச் சிந்திய தமது வியர்வையின் ஒரு பகுதியை தமதுகிராமத்தின் வளர்ச்சிக்காகவும் சிந்தத் தொடங்கினர்

அடிமைத்தனத்திலிருந்து விடுபடவேண்டுமானால் சமூக ஒற்றுமை தேவை என்பதை வலியுறுத்தினார் அவ்வூர் பெரியவர் ஒருவர் அதன்படிஇளைஞர்களைஒன்றிணைத்து செயற்படத்தொடங்கியவர் பின் முழு சமூகத்தையும் இணைத்துக் கொண்டார்.

சனசமூகநிலையத்தின்தலைவராக கடந்த பதினைந்து வருட காலமாக இருந்துவரும் செல்வம் என்பவரை சந்தித்த போது நான்கு பிரிவுகளாக செயற்பட்டு வந்தஇந்தகிராம மக்களிடம் ஒற்றுமையின் அவசியத்தை விளக்கி அனைவரையும் இணைத்ததாக நிர்வாகசபையினைத் தெரிவுசெய்தோம் பின் சமுதாய வளர்ச்சிகருதி சினிமாப்படம் முதல் கசிப்பு ஒழிப்பு,கோயிலில் பலிகொடுத்தல் ஒழிப்புபோன்றனவற்றில் இறுக்கமான கட்டுப்பாடுகளைவிதித்ததுடன்குடும்பப்பிணக்குகள், வழக்குகள், கொடுக்கல் வாங்கல்பிணக்குகள்,களவுகள்போன்றவற்றை தீர்த்தோம்.

கிராமவளர்ச்சி. தனிநபர் வளர்ச்சியின்விழிப்புணர்வுடன் எமக்கு ஓர் வீதி தேவை என்பதை உணர்ந்தோம் நிலவுடைமையாளர், கிராமசேவையாளர், உதவி அரச அதிபர் ஆகியோருடன்தொடர்புகொண்டு வைத்தியசாலைக்கு ஒரு நோயாளியையோ அன்றி நிறைமாத கர்ப்பிணியையோ கூட்டிச்செல்ல வாகனம் வர பாதை அமைத்து தரும்படிபல தடவைகோரியும் பலனளிக்காததால் பலவந்தமாக ஒரு இரவும்ஒருபகலும் ஊரார் அனைவரும்பால்வேறுபாடின்றி சேர்ந்து இவ்வீதியை அமைத்துக் கொண்டோம் என்றார்.

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி மேற்கு பகுதிகளை உள்ளடக்கியுள்ள இக்கிராமத்தில் வாழும் மக்கள் மீன் வியாபரம், கூலித்தொழில், சீவல் தொழில்களையே செய்து வருகின்றனர்.

இக் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஜனசக்தி சனசமூக நிலையம், கலைமதி சனசமூக நிலையம், மாதர் சங்கம், நூல் நிலையம், விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை என்பன அயராது உழைத்து வருகின்றன இவற்றின் தோற்றத்தைத் தொடர்ந்து கொத்தடிமை நிலையிலிருந்து விடுபட்டு இக் கிராமம் விடிவு பெறத் தொடங்கியது

புத்தூர் மேற்கில் 379குடும்பங்களைச் சேர்ந்த 1706 பேர் வாழ்கின்றனர் இவர்களில் 846 ஆண்களும் 860 பெண்களுமுள்ளனர இவர்களில் 463 பேர் கல்வி அறிவு அற்றவர்கள கவே யுள்ளனர் கல்வி அறிவுடையவர்களில் இருவர் சாதாரண தரமும் ஒருவர் மட்டுமே உயர்தர வகுப்புவரை கற்றவர்களாக வுள்ளனர் மொழியறிவில் தமிழ் எழுதத் தெரிந்தவர்களாக 293 பேர் காணப்படுவதுடன் ஆங்கிலம் பேசத் தெரிந்தவர் ஒருவரும் உள்ளார் இங்கு 50 வீதத்திற்கு மேற்பட்டோர் தொழில் புரியக்கூடியவர்களாகவுள்ள போதிலும் 28வீதமானவர்களே தொழில் புரிகின்றனர் ஏனையோர் தங்கிவாழ்பவர்களாகவேயுள்ளனர் இவர்கள் பொதுக்கூலி, கமம், மீன் வியாபாரம், சீவல், விறகு வியாபாரம், சிகை அலங்காரம் சில்லறை கடை வியாபாரம், பன்னவேலை, தச்சுவேலை, சைக்கிள் கடை, தையல் வேலை, கொல்லவேலை ஆகியனவற்றை தொழிலாகக் கொண்டுள்ளனர் ஒருவர் கூட்டுறவு முகாமையாளராகவும் இருவர் கல்வி வளர்ச்சிக்கழக தொண்டர் ஆசிரியராகவுமுள்ளனர்

சிறுப்பிட்டி மேற்கில் 215 குடும்பங்களைச் சேர்ந்த 403 ஆண்களும் 380 பெண்களும் வாழ்ந்து வருகின்றனர் இவர்களில் 113 பேர் கல்வி அறிவு அற்றவர்களாகவுள்ளனர் ஏனைய கல்வியறிவுடையவர்களில் சாதாரண மற்றும் உயர்தரம் வரை ஒவ்வொருவரும் கலைமுதற் தேர்வு வரை இருவரும் கல்வி கற்றுள்ளனர் தமிழ் எழுதத் தெரிந்தவர்களாக 214 பேர் உள்ளனர் இங்கும் ஐம்பது வீதத்திற்கும் அதிகமானோர் தொழில் புரியக் கூடியவர்களாகவுள்ள போதிலும் முப்பது வீதமானவர்களே தொழில் புரிபவர்களாகவும் ஏனையோர் இவர்களில் தங்கி வாழ்பவர்களாகவுமே யுள்ளனர் இவர்களில் 66 வீதமானோர் கூலித்தொழிலாளர்களாகவும் 18 வீதமானோர் விவசாயம் செய்பவர்களாகவும் இரண்டு வீதமானோர் சீவல் தொழிலாளர்களாகவுமுள்ளனர் இவர்களுடன் எழுதுவினைஞர் ஒருவரும் மருந்து விற்பனையாளர் இருவரும் தொண்டர் ஆசிரியர்களாக மூவரும் பணிபுரிகின்றனர்

இவ்வாறான பின் தங்கிய நிலையில் இருந்து முற்று முழுதாக விடுபட்டு சொந்தக் காலில் தமது பலத்தில் எழுந்து நிற்க முடியாது தவித்துக்கொண்டிருந்த இம் மக்களின் வாழ்வை வளம்பெறச் செய்ய தமிழீழ விடுதலைப் புலிகள் தோள் கொடுக்க முன்வந்தனர்

புத்தூர்மேற்கு சிறுப்பிட்டி மேற்கு கிராமசேவகர் பிரிவுகளை இணைத்த கிராமிய பாசறை ஒன்றை நடாத்தி சமூகத்தினரை முற்றாக இணைத்துக் கொண்டனர் ஐந்து நாட்களாக அங்கு தங்கியுள்ள யாழ் மாவட்ட அரசியல் துறையினர் அவ்வூர் மக்களின் உதவியுடன் பல அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக மேற் கொண்டு வருகின்றனர்

நடந்துசெல்லவே முடியாதளவிற்கு கிடங்குகளாகவும் கற்பாறைகளாகவும் நெளிந்து வளைந்து நிமிர்ந்து இக்கிராமத்தை ஊடறுத்துச் சென்று கொண்டிருந்த நீகன் வீதி துரிதமாக செப்பனிடப்பட்டு மிக அழகான அகலமான வீதியாக மாற்றப்பட்டுள்ளது. 75 ற்கும் மேற்பட்ட குடிசைகள் புதிதாக அமைக்கப்படுகின்றன இவை குடியிருக்க வீடு இல்லாதவர்களுக்கு வழங்கப்படவுள்ளன மேலும் கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு ஐம்பதிற்கு மேற்பட்டோருககு தொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அங்குள்ளவர்களுக்கு நெசவு தையல் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

மேலும் விடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவினர் வீடு வீடாகச்சென்று அவர்களைப் பரிசோதித்து சிகிச்சையளிப்பதுடன் சுகாதார வசதிகளையும் ஏற்படுத்தி வருகின்றனர் கிணறுகளுக்கு குளோரினிடல் மருத்துவ சுகாதார கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றை மேற்கொண்டு வருகின்றனர்.

வீதியோரங்களில் மரக்கன்றுகளை நாட்டி பராமரித்தல் கமக்காரர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல், விவசாயபயிற்சி வகுப்புகளைநடாத்துதல், ''கிராமிய வாழ்வு'' உழைப்பும் சேமிப்பும் என்பனபற்றியவிரிவுரைகளை மக்களுக்கு வழங்குதல், கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுதல் செயற்கை முறைச் சினைப்படுத்தல் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்வதுடன் அடைமுட்டைகளையும் கோழிக் குஞ்சுகளையும் வழங்கி கால்நடை வளர்ப்பு பற்றிய விளக்கங்களையும் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்களையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருவதுடன் தமது உள்ளூர் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியையும் விற்பனை நிலையத்தையும் அமைத்துள்ளது.

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினர் வலிகாமம் துணைப் பொறுப்பாளர் செல்வி கோமதி தலைமையில் வீடுவீடாகசென்றுஅனைத்துக் குடியிருப்பாளர்களையும் சந்தித்து ஒவ்வொரு குடும்பங்களிலும் உள்ள பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைறக்களையும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுபற்றி செல்வி கோமதி கருத்துத் தெரிவிக்கையில் இங்குள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் கூலித்தொழிலையே பிரதானமாகக் கொண்டுள்ளனர். வேறு வேறு அயல் கிராமங்களுக்கு சென்று இவர்கள் கூலிவேலையில் ஈடுபடுகின்றனர். நாளாந்தம் 40 முதல் 50 ரூபாவரையுமே கூலியாகப் பெறுகின்றனர். இவர்களுக்கான தையல் பயிற்சி, நெசவுப்பயிற்சி போன்றவற்றை வழங்குவதினூடாக சுயதொழிலை மேற்கொள்ள முயற்சிக்கிறோம் ஆயினும் பயிற்சியின் போதும் சம்பளம் வழங்க வேண்டியுள்ளது: இல்லையேல் இவர்கள் கூலி வேலைக்கு சென்றுவிடுவார்கள் தினமும் இருவேளையே உணவு உண்கின்றனர். காலையில் பாணும் இரவில் சோறுமே இவர்களது உணவாகிறது இதனால் போசாக்கு குறைந்தவர்களாகவேயுள்ளனர் திருமணப்பிரச்சினைகளோ, சீதனப்பிரச்சினைகளோ பெரிதாக இருப்பதாகத் தெரியவில்லை இவர்களது பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு காணமுடியாதிருப்பதால் தொடர்ந்து இங்கு வேலை திட்டங்களை மேற்கொள்ள எண்ணியுள்ளோம் என்றார்

இவர்கள் விதவைகளுக்கான வேலை வாய்ப்புத் திட்டங்களையும் மேற்கொள்ளவிருப்பதுடன் ''விடிவெள்ளி'', உதயதாரகை, சகாயசீலம் உற்பத்திப் பொருள் கண்காட்சி விற்பனை நிலையத்தினையும் நிறுவியுள்ளனர்,

மகளிர் அமைப்பின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் இவ்வூர் மக்களையும் போராளிகளையும் இணைத்த நாடகங்களை மேடையேற்றி வருகின்றனர் இவற்றுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டவர் கருத்துத் தெரிவிக்கையில், இங்குள்ளவர்கள் கலையார்வம் மிக்கவர்களாகவுள்ளனர். எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். அபிநய நடனம், கிராமிய நடனம் ஆகியவற்றில் ஈடுபாடுள்ளவர்கள். இவர்களுக்கு நாடக பயிற்சி அளித்து இன்று மேடையேற்றவுள்ளோம். மேடைகளில் நடாத்த இது வரை இவர்களுக்குசந்தர்ப்பம் கிடைக்காது போனது துரதிஷ்டமே. இனிமேல் கலை பண்பாட்டு ரீதியில் இவர்களை வெளி உலகத்துடன் இணைத்து நாடகங்களை நடாத்தவுள்ளோம். இவர்களுக்கான பக்கவாத்தியங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளோம். இதன் மூலம் இவர்கள் கலைத்துறையில் ஆர்வம் காட்டுவர் என்றார்.

விளையாட்டுக் குழுவினர் வலைப்பந்தாட்டம், தாச்சிப் போட்டி, புதிய முறையில் செட்டப் ஏரபந்தாட்டம ஆகியவற்றில் இவர்களை ஈடுபடுத்தி வெளிக் கழகங்களுடன போட்டிகளை நடாதது வருகின்றது. இதன் மூலம இவாகள் விளையாட்டுத் துறையில இன்று மிகுந்த ஆாவம காட்டி வருவதை அவதானிகக முடிநதது. இங்கு சிறுவர்கள் முதல பெரியவர்கள் வரை வயது, பால் வேறுபாடின்றி தமது கவலைகளை எல்லாம் மறந்து சங்கீதக் கதிரை விளையாடி மகிழ்நதது மகிழ்வைத் தருகிறது.

மாணவர் அமைப்பினர் முதியோர் கல்வித் திட்டதை ஆரம்பிதது அங்குள்ள ஆசிரியாகளின ஒததுழைப்புடன நடாதது வருகினறனா. மேலும பாலர் பாடசாலையையும ஆரமபிததுளளனா. இதன மூலம இவர்களது கலவி அறிவை வளாககமுயறசிகள மேறகொணடு வருகின்றனா.

இதேவேளை கடந்த காலப் போராட்ட வரலாறறையும் கறிலங்கா ஆககிரமிபபாளாகளின கொடூரங்களையும கொணட புகைபபடக் கண்காட்சி ஒன்றும நடாததபபடுவதுடன மாவீரா பணிமனையும அமைககபபடடுளளது.

இககிராமம் இன்று விடுதலைப புலிகள மேறகொணடு வரும் அபிவிருத்தி நடவடிககைகளால சகல துறைகளிலும் விருத்தியடைந்து எதிர் காலததில் சகல அடக்கு முறைகளிலுமிருந்தும் விடுபட்டு சிறந்ததோர் கிராமமாக திகழும் என எதிர்பார்க்கலாம்.

சசிகரன்

நல்லூர் கள நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சிறிமாவோவின் குறி ஜனாதிபதிப் பதவி;

# இதில் விட்டுக்கொடுப்பிற்கு இடமில்லை

சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடந்த 23ம் திகதி காலை 10-30 மணியளவில் டாலி வீதியிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. கட்சியின் தலைவியாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பொதுச்செயலாளராக தர்மசிறி சேனநாயக்காவும் தெரிவு செய்யப்பட்டதுடன் பிரதித் தலைவியாக திருமதி சந்திரிகா குமாரணதுங்காவும், உதவி பொதுச் செயலாளராக எஸ்.பீ திசநாயக்காவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இக்கூட்டத்தில் பல குத்து வெட்டுக்கள் இடம்பெறலாமென எதிர் பார்க்கப்பட்ட போதும் அத்தகைய நிலைமை எதற்கும் இடமளிக்காத வகையில் கட்சியின் மத்திய கமிட்டி மிக சமயோசிதமாகவே நடந்து கொண்டது எனக் கூறப்படுவது மிகையான தொன்றல்ல.

வருடா வருடம் நடைபெற வேண்டிய இச்செயற்குழு கூட்டமானது கட்சியில் தோன்றிய பதவி போட்டிகளின் காரணமாகவே கடந்த சுமார் எட்டு வருடங்களுக்கும் மேலாக கூட்டப்படவில்லை. கட்சியின் உறுப்பினர்கள் பலர் கட்சியில் உண்மையான ஜனநாயகம் இல்லை என்றும் பகிரங்கமாகவே விமர்சனம் செய்து வந்தனர் அந்த நிலைமை ஓரளவுக்கு தணிந்திருக்கிறது என்பதையே இப்போது நடத்தப்பட்டுள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டம் எடுத்துக்காட்டுகிறது.

## ஆட்சியை பிளவுபடுத்தும் சதி

ஆயினும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தொடர்ந்து 35 வருடங்களுக்கு மேலாக வகித்து வரும் கட்சித் தலைவி பதவிக்கு இம்முறை ஒரு விதத்தில் அச்சுறுத்தல் இருந்தது மேல் மாகாண உறுப்பினர்கள் சிலர் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதிவேட்பாளராகவும் கொண்டு வருவதற்கு என்ற எண்ணத்தில் கையெழுத்து வேட்டையில் இறங்கினர் கையெழுத்துகள் அடங்கிய மகஜர் ஒன்றை செயற்குழுக் கூட்டத்திலேயே கொண்டு வருவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதனைத் தெரிந்து கொண்ட திருமதி சிறிமாவோ கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா மூலம் அறிக்கை ஒன்றை வெளியிட வைத்தார். கட்சியின் ஒற்றுமையை விரும்பாத சில சதிகார சக்திகளும் ஐ.தே.கவும் இணைந்து சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தி சிதைந்து சின்னாபின்னமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அந்த அறிக்கையில் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார் அத்துடன் இச்சதிச் செயலுக்கு கட்சி ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும், திருமதி சிறிமாவோ தொடர்ந்தும் கட்சியின்தலைவியாக நீடிப்பார் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த அறிக்கை வெளியாகிய பின்னர் தாயாரின் அறிவுறுத்தலின் பேரில் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தாயாரின் அடிச்சுவட்டைத் தானும் பின் பற்றப் போவதாகவும், இதில் எந்த வேறுபாடும் இருக்கப்போவதில்லை எனவும் தாயாரான திருமதி சிறிமாவோவே தலைமைப்பதவிக்கு பொருத்தமானவர் எனவும் அறிக்கை வெளியிட்டார்.

இதேவேளை கொட்டிகாவத்த பிரதேசசபையில் தென் மாகாணசபைத் தேர்தல் வெற்றிக்காக பொதுசன ஐக்கிய முன்னணிக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது இத் தீர்மானத்தில் திருமதி சந்திரிகாவின் பெயரும், அமரசிறி தொடங்கொடவின் பெயரும் மட்டுமே இடம் பெற்றிருந்தது ஆனால் இத் தீர்மானத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பற்றி ஒருவார்த்தையேனும் குறிப்பிடவில்லை தேர்தல் வெற்றிக்கு வழிகாட்டியவர்கள் சந்திரிகாவும் தொடங்கொடவும் மட்டுமே என்றால் திருமதி சிறிமாவோவின் நிலை என்ன என்பது பல உறுப்பினர்கள் மத்தியில் கேள்வியாகியது.

இது தொடர்பாக ஒருவித கருத்து மாயை நிலவியது. சிறிமாவோ தூக்கி எறியப்பட்டு விடுவாரா என்ற சந்தேகத்தைக்கூட கட்சியின் மட்டங்களில் ஏற்படுத்தியிருந்தது. இந்தச் சந்தேகத்தை கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேசசபை உறுப்பினரான சுகத் ஏவா விதாரண பகிரங்கமாகவே குரல் எழுப்பியிருந்தார், இதன் காரணமாக இத்தீர்மானத்தைத் தான் ஆதரிக்கப்போவதில்லை எனவும் அவர் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

சுதந்திரக் கட்சியில் தனது தலைமைப் பதவிக்கு ஆபத்து ஏற்படுமே என்ற அச்சத்தினாலேயே சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த எட்டு வருடங்களுக்கும் மேலாக கட்சியின் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டப்படுவதை ஒத்திவைத்து வந்தார். அனுராவின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து நிலைமை ஓரளவுக்கு தணிந்து காணப்பட்டது ஆனால் தற்போது அது வேறு ரூபத்தில் இப்போது விஸ்வரூபம் எடுத்து வருவது தெளிவு. இந்த நிலையில் தான் எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக சிறிமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சிறிமாவோவின் ஆசை

சிறிலங்காவின் ஜனாதிபதி ஆசனத்தில் ஒரு நாளேனும் அமரவேண்டும் என்பதுவே சிறிமாவோவின் நீண்டநாள் ஆசையாகும். இந்த இலக்குடனேயே அவர் இப்போதும் செயற்பட்டு வருகின்றார் என்பதை மிகவும் தெளிவாக உணர முடிகின்றது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியைக் கொண்ட இன்றைய அரசியலமைப்பை எதிர்ப்பதாகவும், மீண்டும் பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தைக் கொண்டு வரும் ஒரு புதிய அரசியலமைப்பை ஏற்படுத்தத் தான் முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்து வருகின்றார். இந்த நிலையில் அவர் ஏன் ஜனாதிபதி பதவிக்கு வர விரும்புகின்றார் என்ற கேள்வி எழுப்பக்கூடியதே.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டால் இளைய தலைமுறையின் வாக்குகள் எதிர் பார்க்கப்படுவது போல் அவருக்குக் கிடைக்குமா என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது. 1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பி.யினரின் கிளர்ச்சி ஏற்பட்ட போது இளைஞர்களை வகைதொகையின்றிக் கொலை செய்து சிறிமாவோ அடக்கியதே இந்தக் கேள்வி எழுப்பப்படுவதற்கான அடிப்படையாகும். இதன் காரணமாக இளைய தலைமுறையின் குறிப்பாக சிங்கள இளம் தலைமுறையின் வெறுப்பு சிறிமாவோவிற்கு எதிராக இருக்கும் எனவும், இது வாக்குகளைக் கவருவதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அரசியல் வட்டாரங்களில்



சிறிமா

தெரிவிக்கப்படுகிறது அத்துடன் தமிழ் இனத்திற்கு எதிரான கல்வி, தொழில் வாய்ப்புக்களில் தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்தது மூலம் தமிழ் மக்களின் எதிர்ப்பும் இவருக்கு இருப்பதும், சிறிமா-சாத்திரி உடன்படிக்கை மூலம் மலையக மக்களை வெளியேற்றியதும், அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட யுகம் பற்றிய அச்சங்களும், சிறிமாவோ ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்கும் போது மேலெழும்பும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற அம்சங்களால் வாக்குகளை வெல்வது கணிசமான கடினமாக இருக்கும் என்றும் தேர்தலின் இறுதி முடிவுகள் வெளியிடப்படும் வரை வெற்றியை உறுதி செய்வது கடினமானதாகவே இருக்கும் எனவும் கூறப்படுகிறது.

ஆனால் சந்திரிகா குமாரணதுங்கா போட்டியிட்டால் இந்த அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு கிடைக்கும் எனவும் இதன் மூலமாக இவரது வெற்றி தேர்தலுக்கு முன்னரே பெரும்பாலும் உறுதி செய்யப்பட்டு விடும் எனவும் திருமதி சந்திரிகா ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராகினால் மாற்றத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு கிடைப்பது சந்தேகத்திற்கு இடமற்றது எனவும் இவ் அவதானிகள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

## சுதந்திரக் கட்சியில் தலைமைப்போட்டி

சுதந்திரக் கட்சியில் தலைமைப் போட்டி தீவிரம் அடைவது இது தான் முதல் தடவையல்ல பண்டாரநாயக்காவின் மறைவைத் தொடர்ந்து 1959ம் ஆண்டில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்ற போது தலைமைப் பதவியைப் பெறுவதில்போட்டிஏற்பட்டது சுதந்திரக் கட்சி பிக்கு பெரமுனவின் தலைவராக விளங்கிய களனிய ரஜமகா விகாராதிபதி விமல விஜயவர்த்தன தேரோ, கன்னங்கரா, சம்பி குணவர்த்தனா, தகநாயக்கா போன்றோருக்கிடையே கடுமையானமோதல் நடைபெற்றது. இந்த நிலையில் செயற்குழுக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது நீண்ட சமாதான முயற்சிகளின் பின்னர் செயற் குழு கூட்டப்பட்டு தகநாயக்கா தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் பின்னர் 1961-ம் ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலே சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவிக்கு தகநாயக்காவிற்கும் சிறிமாவோவிற்கும் இடையே போட்டி ஏற்பட்டது. எனினும் பண்டாரநாயக்காவின் மறைவினால் ஏற்பட்டிருந்த அனுதாப அலையின் காரணமாக திருமதி சிறிமாவோ தலைவராக தெரிவானார். இதன் பின்னர் சுதந்திரக் கட்சியின் பதவியில் திருமதி சிறிமாவோ நீடித்து வருகின்றார்.

எனினும் தலைமைப் பதவிக்கான போட்டிகள் காணப்பட்டால் அதனை வெற்றிகரமாக முறியடித்தும், தன்னையும் மீறி செயற்படுவோரை கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாகக் குற்றம் சுமத்தி வெளியேற்றியும், திருமதி சிறிமாவோ தமது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளத் தவறவில்லை.

குடியுரிமை பறிக்கப்பட்டிருந்த நிலையிலும் கட்சி மிகவும் பலவீனப்பட்டிருந்த வேளையிலும் கூட கட்சியில் தனது தலைமைத்துவத்தை தக்க வைத்துக் கொள்வதில் திருமதி சிறிமாவோ கணிசமான வெற்றியையே பெற்றிருந்தார்: 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிய சமயத்தில் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஹெக்டர் கொப்பேகடுவ நிறுத்தப்பட்டபோதும், கட்சியின் மூத்த உறுப்பினர்களான ரி.பி இலங்கரத்தினா, கே.பி ரத்நாயக்கா போன்றோர் ஓரம் கட்டப்பட்டனர் இந்தத் தேர்தல் பிரசாரத்தின் போது தனது சொந்தத் தோட்டத்தையே விற்று கட்சியின் வெற்றிக்காகப் பாடுபட்ட விஜயகுமாரணதுங்கா கட்சியில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருந்த வேளையில் அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார் அநுராவுக்கும் இதேபோன்ற நிலைதான் அண்மையில் ஏற்பட்டது.

அனுரா பண்டாரநாயக்காவும், அவரது ஆதரவாளர்களும், அவருக்கு நெருக்கமான உறவு உடையவர்கள் எனக் கருதப்படுபவர்களும் சுதந்திரக் கட்சியின் இளைஞர் பிரிவு, மகளிர் பிரிவு, பிக்கு பெரமுனை போன்ற அமைப்புக்களின் முக்கிய பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டதும் தனது தலைமைப் பதவிக்கு ஆபத்து ஏற்படும் அச்சத்தை உணர்ந்து கொண்ட சிறிமாவோ அவரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார்.

இதேவேளை அனுரா பண்டாரநாயக்கா தனக்கென ஒரு அணியை சுதந்திரக் கட்சிக்குள் உருவாக்கிக் கொண்டதும் அதற்கு முழு ஒத்துழைப்பையும், முன்னாள் சிங்கள மகாஜன பெரமுன என அழைக்கப்பட்ட ஹெல உறுமய அணியினர் இதற்குப் பின்னணியிலிருந்து ஒத்துழைப்பு வழங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் வருகையை தொடர்ந்து அனுரா பண்டாரநாயக்கா மீது கட்சி நடவடிக்கையை மேற்கொண்டது. திருமதி சந்திரிகாவின் வருகை சுதந்திரக் கட்சியில் அனுராவை செல்லாக்காசாக்கியது. சு.கவின் தற்போதைய 67 பாராளுமன்ற உறுப்பினர்களில் 42 பேரின் ஆதரவு தனக்கு இருப்பதாக அனுரா அடிக்கடி கூறிக் கொண்டபோதும் அவரின் வெளியேற்றத்தை தொடர்ந்து அவர்கள் அனைவரும் பெட்டிப் பாம்பாக அடங்கிப் போயினர் என்றே கருதப்படுகிறது.

அனுராவின் வெளியேற்றத்தை தொடர்ந்து கட்சியின் பிரதான பதவிகளை இறுகப் பிடித்துக் கொண்டு ஒரு அணியை தலைமை தாங்கும் தளபதியைபோன்று கட்சியை புதிய பாதையில் வீறுநடை போட்டு நடக்கத் தொடங்கினார் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இது கட்சியின் ஒரு சாரார் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருந்தபோதும்மாகாணசபைத் தேர்தல் வெற்றிகளும், திருமதி சந்திரிகாவின் பின் அணிதிரண்ட மக்களும் அதனை வெளிக்காட்டும் சந்தர்ப்பத்தை வழங்கவில்லை.

திருமதி சந்திரிகா சிறிலங்கா மக்கள் கட்சி, ஐக்கிய சோசலிச முன்னணி. பி என்.பி. ஆகிய கட்சிகளை சிதைத்து சின்னா பின்னமாக்கியவர் என்றும், நான்காவதாக சுதந்திரக் கட்சிக்கும் இதே நிலையைத்தான் அவர் ஏற்படுத்துவார் என்றும் பகிரங்கமாக தெரிவித்தவர்கள் கூட மௌனத்தையே கடைப்பிடிக்க வேண்டியதாகியது.

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தனது தந்தையாரின் அடிச்சுவட்டையும், விஜயகுமாரணதுங்காவின்செயலாற்றலையும், இடது சாரிகளின் ஆதரவையும் ஈர்த்து தீவிரமாக முன்னேறுவார் என்றே சாதாரணமாக பலரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த நிலை அவருக்கு அசைக்க முடியாத ஒரு இடத்தை வழங்கும் என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை கட்சியில் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா நீடிப்பாரா அல்லது அனுராவைப் போல வெளியேற்றப்படுவாரா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. இது எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் எனலாம். ஒருவேளை திருமதி சிறிமாவோ தனக்கு பின்னால் வாரிசாக திருமதி சந்திரிகா வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கினல் திருமதி சந்திரிகாவின் செல்வாக்கு வளருவதைக் கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடும். அல்லது தமது கட்டை மீறி திருமதி சந்திரிகாவின் செல்வாக்கு வளருமேயானால் அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என்று திருமதி சிறிமாவோ அறிவிக்கும் சாத்தியக் கூறுகளும் இல்லாமல் இல்லை.

நிமலராஜன்

# அமைதிக்கு அப்பாலும் ஆழம் பார்க்கும் அமெரிக்க சிந்தனை

சென்ற ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரத்தில் சி. என். என். - ரைம் நிறுவனங்கள் கூட்டாக மேற்கொண்ட கருத்துக் கணிப் பொன்றின் முடிவுகள்பின்வருமாறு அமைந்தன. அமெரிக்காவின் வெளி விவகாரக் கொள்கை எவ்வாறு அமைய வேண்டும் என்கிற வினாவுக்கு 66 சதவீத விழுக்காட்டினர் சருவதேச அரசியலில் ஈடுபாட்டைக் குறைத்து அமெரிக்க உள் விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றனர். 29 சதவீத விழுக்காட்டினர் மட்டுமே அமெரிக்கா தனது தலைமைத்துவ செயற்பாட்டின் மூலம் சருவதேச பிணக்குகளைத் தீர்த்து சனநாயகத்தை ஊக்குவிக்க வேண்டும் என விரும்பினர். அதேசமயம் அமெரிக்கா சருவதேச விவகாரங்களில் தனது செல்வாக்கை இழந்துவிட்டதா என்கிற வினாவுக்கு 58 விழுக்காட்டினர் ஆம் என்று பதிலளித்தனர். 51 விழுக்காட்டினரோ சனாதிபதி கிளின்டன் உறுதியற்ற ஒரு வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக கூறினர். பொதுவாக பார்க்குமிடத்து சருவதேச விவகாரங்களில் தாம் முதலிடம் வகிக்க விரும்பும் அதே சமயம் தனது உள்நாட்டு நிலைமைகள் பற்றி சுயகவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் விரும்பும் இப்போக்கு இன்னோர் குழப்பகரமானதான கொள்கையை கடைப்பிடிப்பதாக இன்று சருவதேச ரீதியிலும் உள்நாட்டிலும் சரி, கிளின்டன் மீது குற்றஞ்சாட்டப்படுவதிலிருந்து பிரதிபலிப்பதை உய்த்துணர முடிகின்றது.

இன்று கிளின்டனின் வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்கர் புகழுக்கு அதன் மேலாண்மைக்கு களங்கம் விளைவிப்பதாக பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதுவும் சென்ற மாதம் 22ஆம் திகதி முன்னாள் சனாதிபதி நிக்சனின் மறைவின் பின் அவரோடு ஒப்பிட்டு கிளின்டன் தாக்கப்படுகிறார். பனிப்போரின் பின்னர் ஒற்றை முனை மேலாதிக்க சக்தியாக பாலைவனப் புயலின் பின்னர் வெற்றிமுகம் நோக்கிய வல்லரசாகக் கருதப்பட்ட அமெரிக்கா கிளின்டனின் 15 மாத ஆட்சியில் எல்லாவற்றையும் இழக்கும் அபாயம் தோன்றுவதாக அமெரிக்க தரப்பில் இப்போது சங்கு ஊதப்படுகின்றது. வெளிநாட்டுத் தலைவர்களின் பேச்சுவார்த்தைகளின்போது தொகுக்கப்பட்ட புலனாய்வுஅறிக்கைகள் அமெரிக்க நட்பு நாடுகள் அமெரிக்க கொள்கையை ஒழுங்கற்ற வெறும் வாய்ப்பேச்சு விந்தையாக நம்பகமற்றதாக க்ருதுவதாகத் தெரிவிக்கின்றன. பத்திரிகையாளர் வினாக்களைத் திசை திருப்ப வீண் வீராப்பு வார்த்தைப் பிரயோகங்களை அவ்வப்போது கிளின்டன்மேற்கொள்வதாக, பின் செயலில் என்று வரும் போது பின்வாங்குவதாக அமெரிக்காவின் நெருங்கிய நாடுகளான யப்பான், ஜேர்மனி, பிரித்தானியா போன்றவையே குறைப்படுகின்றன. அண்மையில் அமெரிக்க அரசியல் ஆய்வாளர் ஒருவர் ''நீங்கள் சுடப்போவதில்லை என்றால் வீணாக துப்பாக்கியை நீட்டி குறிபார்க்க வேண்டாம்'' என கிளின்டன் போக்கு குறித்து தனது ஆலோசனையை வழங்கினார் எனப்படுகிறது. பொசுனியா, சோமாலியா, கெய்ற்றி, வடகொரியா, சீனா, ஈராக் (இப்போது றுவாண்டாவும் இப்பட்டியலில் சேர்க்கப்படலாம்)என கிளின்டனின் தோல்விப் பட்டியல் நீள்கிறது. அதிலும் குறிப்பாக சோமாலியாவில் தமது இலக்குகளை நிறைவேற்ற முடியாமல் அமெரிக்கப் படைகள் திரும்பியதன் பின் கெய்ற்றி தீவிலுள்ள இராணுவ சர்வாதிகாரிகள், பொசுனிய சேர்பியர்கள், வடகொரிய கும்இங் சுங் தலைமையிலான ஆட்சியாளர் எல்லோருமே அமெரிக்க மிரட்டல்களைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லையெனமுறைப்பாடு கூறப்படுகிறது. எனவே அமெரிக்கத் தரப்பால் உயரிய விழுமியமாக இப்போது உலகில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய உலக ஒழுங்கின் அடிப்படைகளான எல்லா நாடுகளும் தடையற்ற வணிக முறைமைகளை - எல்லா நாடுகளும் சனநாயக அரசியல் முறைமைகளை மேற்கொள்கின்ற - சமூகநீதியும் மனித உரிமைகளையும் பேணப்படும் ஒரு புதிய சுதந்திர உலகை உருவாக்குவதில் அப்பணியைத் தலைமை தாங்குவதில் கிளின்டன் தவறி விட்டார் என்பதே அமெரிக்க நலன் பேண் சிந்தனையாளர் நிலைப்பாடாக இன்று உள்ளது.

ஆனால் அதேசமயம் கிளின்டனின் தரப்பால் தற்போது உலகில் எடுக்கப்படும் எம்முயற்சியும் அவரின் முன்முயற்சியே என்கிற வாதம் முன்வைக்கப்படுகின்றது. அதற்கு ஆதாரமாக இவர்கள் இப்போது பொசுனிய சேர்பியா மேல் விமானத் தாக்குதலுக்கான முன்முயற்சி - அது முற்றிலும் பயன் அளிக்காத நிலையில் பொசுனிய முசுலிம்கட்கு எதிரான ஆயுதத் தடையை நீக்கல் பற்றிய முன்முயற்சி, கெய்ற்றித்தீவுக்கு எதிராக தற்போது முழு அளவிலான பொருண்மியத் தடை விதிக்கப்படல் போன்றவற்றை சுட்டிக்காட்டுகின்றனர். எனினும் இவற்றை விட அமெரிக்க மக்கள் கூடுதலாக விரும்புகின்ற வலுவான காரணியொன்றும் இப்போது தெரிவிக்கப்படுகின்றது. பனிப்போர் நிலவிய காலத்தில் உலகத்தின் சுமையெல்லாம் எம் தலையைத் தாக்க முற்பட்டதன் காரணமாக தாக்கி ஈற்றில் பலத்த அமெரிக்காவின் உயிர்ச்சேதத்தையும் பொருண்மிய பின்னடைவையும் சந்தித்ததற்குப் பதிலாக இப்போது அமெரிக்க படையினர் உயிர்கள் வீணாகப் பறிகொடுக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதோடுபெருமளவு பணமும் மீதப்படுத்தப்படுவதால் உள்நாட்டில் வேகமாக வீழ்ச்சியடையும் அமெரிக்கரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அதிகரிக்கும் பாரிய குற்றச் செயல்கள் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படவும் முடியும் என்பதே அக்காரணி. அதிலும் குறிப்பாக முன்னெப்போதையும் விட இப்போது மிகக் குறைந்தளவு வெளியாபத்தேநிலவுவதாகவும்எனவே வெளிவிவகாரக் கொள்கையால் ஏற்படும் தவறுகளால் முன்னைப்போல் பாதிப்பு ஏற்படவில்லையென்றும்வாதிடப்படுகிறது. எனவே பலமற்ற வெளிவிவகாரக் கொள்கையே இப்பொழுது பொருத்தமானது எனக்கூறுவோரும் அங்குள்ளனர். இக்கருத்து அமெரிக்க மக்கட்கு பெருத்த உடன்பாடாக இருந்தாலும் தற்போதைய நிலை தொடர்வதை அமெரிக்க உயர் நிர்வாக பீடம் தொடர்பு சாதன முதலாளிகள் பழமை பேண் வாதிகள் விரும்பவில்லை. இவர்கள் இப்போது அமெரிக்காவின் பெருமைகேள்விக்குறியாக்கப்பட்டமை குறித்து அதிக விசனம் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.



நிக்சனுடன் கிளின்டன்

உண்மையிலே அமெரிக்க சிந்தனை எனக் கூறக்கூடியது இவர்களினால் தோற்றுவிக்கப்படுவதுதான். அது எவ்வாறு இருக்கின்றது? அமெரிக்க சிந்தனையின் அடித்தளம் என்ன? என்பதுபோன்ற வினாக்கட்கு விடைகாண ஏற்றாற்போல் அண்மையில் சென்ற மாதம் மாரடைப்பால் மரணமான முன்னாள் சனாதிபதி நிக்சன் எழுதிய கடைசி நூல் சான்று பகர்கிறது. எத்தனையோ தோல்விகளை, வாட்டர்கேட் எனப்படும் பாரிய ஊழல்களை சந்தித்த நிக்சன் இன்று அமெரிக்க சிந்தனையாளர் அடையாளமாக்கப்படுகிறார். அவரை கிளின்டன் தனது முன்னோடியாகக் கொள்ள வேண்டும் என ஆலோசனை வேறு வழங்கப்படுகிறது. அண்மையில் வெளிவந்த அமெரிக்க'ரைம்' இதழொன்றில் நிக்சனின் இறுதி நூலாக இம்மாதம் 18-ம் திகதி வெளியிடப்பட்ட அமைதிக்கு அப்பால் (Beyond Peace) என்கிற நூலின் சில முக்கிய பகுதிகள் முன்னதாகவே வெளியிடப்பட்டன.

நிக்சன் இறப்பதற்கு ஒரு சில நாள்களுக்கு முன்னரே எழுதி முடிக்கப்பட்ட இந்நூலில் அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது மிக முக்கியமானது. அவரது கடைசி வாக்கு மூலமாக - எதிர்கால அமெரிக்காவின் போக்கு எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கான தனது பட்டறிவின் மூலம் பெற்ற பாடமாக இந்நூல்அமைகின்றது. அமெரிக்க சிந்தனை என்பது முன்னர் எவ்வாறு இருந்தது? இனியும் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பதற்கு இதுவே தக்க உதாரணமாகின்றது. அமெரிக்காவின் தற்போதைய போக்கினை கடுமையாககண்டிக்கும் அவர் தற்போதைய தணிந்த கால கட்டத்திற்கு அப்பாலும் அமெரிக்க நலன்கள் குறித்து சிந்திக்கவேண்டிய-செயற்பட வேண்டிய தேவையை வற்புறுத்தும் முகமாகவே அமைதிக்கு அப்பாலும் சிந்திக்க வேண்டும் என புதியதொரு பரிமாணத்தை தற்போதைய காலகட்டத்தில்புகுத்துகிறார் முன்னர் கிழக்கிற்கும்மேற்கிற்குமானமோதல்கள்அணுவாயுதமோதல்களாகவெடிக்காமல் சருவாதிகாரத்திற்கு (கம்யூனிசம்) எதிராகசுதந்திரத்திற்கு-நீதிக்காக போராடினோம். இப்போது பொது உடமைவாதிகள்பனிப்போரின் தோல்வியை சந்தித்து விட்டார்கள். எனவே சோவியத்தினதும் கிழக்கு ஐரோப்பியாவினதும் இன்றைய தோல்வியை முதற்படியாக எடுத்துக் கொண்டு அடுத்த நூற்றாண்டில் சுதந்திரம் எங்கும் பரவ நாம் முயல வேண்டும். ஆனால் இதற்காக மீண்டும் அமெரிக்கா தனது அடிப்படை கோட்பாடுகளில் விசுவாசம் வைத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதை மீண்டும் செயற்படுத்த முயல வேண்டும் இதுவே நிக்சனின் வாதமாகின்றது.

தற்போது கிளின்டன் உள் விவகாரங்களில் சுயகவனம் செலுத்தும் போக்கினை மிக கடுமையாக விமர்சிக்கும் அவர் எமக்கொரு உறுதியான வெளிநாட்டுக் கொள்கை இல்லாமல் உறுதியான உள்நாட்டு கொள்கை இருக்க

அதற்கான காரணமாக அவர் கூறுவது யப்பானும் செருமனியும் பொருண்மிய ரீதியில் வளர்ந்திருந்தாலும் இராணுவ ரீதியில் வளரவில்லை. ருஷ்யாவும் சீனாவும் இராணுவ ரீதியில் வளர்ந்திருந்தாலும் பொருண்மிய பலம் உடையவர் அல்லர் என்கிறார். எனவே அரை நூற்றாண்டு தலைமை அனுபவம் வாய்ந்த - ஏனைய நாடுகள் எவற்றின் மீது ஏகாதிபத்திய தலையீடுகள் செய்யாத நேர்மையான தரகராக செயற்படும் தகுதி அமெரிக்காவிற்கே உண்டென்பது அவர் வாதம்.

அதே சமயம் நேட்டோ, ஐ. நா. போன்ற அமைப்புகள் மூலமாக மேற்கொள்ளப்படும் கூட்டுச் செயற்பாடுகளையும் அவர் நிராகரிக்கின்றார். பலம் வாய்ந்ததாக இருந்தாலும் நேட்டோவினால் பொசுனியாவில் எதை சாதிக்க முடிந்தது? ஐ. நாவின் உறுப்புரிமை உள்ள மூன்றிலொரு பகுதி நாடுகள் அமெரிக்காவின்அர்க்கன்சாஸ் மாநிலத்திலும் சிறியவையே. எனவே இவை என்னசெய்ய முடியும் என்கிறார். அமெரிக்க தரப்பின் நலன்கள் பாதிக்கப்படும்போது மட்டுமே அமெரிக்கா விரைந்து தலையிட வேண்டுமேயன்றி எல்லா விடயங்களிலும் மூக்கை நுழைக்கக் கூடாது என்கிறார். சோமாலியாவில் மனிதாபிமான அடிப்படையில் தலையிட்டு பின் ஐ. நாவின் சோமாலியா நாட்டை கட்டியெழுப்பும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டதை தவறு என்கிறார். புஷ் வளைகுடாப் போரில் ஈடுபட்டது போல எமது நலன்கள் பாதிக்கப்படும்போது மட்டுமே தீர்க்கமான முறையில் தலையிட வேண்டும் என்கிறார். அவரது வார்த்தையில் கூறுவதானால் அமெரிக்க சிந்தனை என்பது பின் வருமாறுதான் அமைகின்றது: ''அமெரிக்கர்கட்கு எப்போதும் இரண்டாவது இடத்தில் இருக்கவோ அல்லது சமமானவரிடையே முதலாவது இடத்தை வகிப்பதோ முடியாது, தெரியாது. இரண்டாவதுஉலகப் போரின் பின் உலகின் சுதந்திர நாடுகளின்தலைவனாக செயற்பட்டு திறன் காரணமாக இருந்த அமெரிக்காவிற்கு வேறு எந்த தெரிவும் பொருத்தமற்றது. இரண்டாம் இடம் என்பதற்கு இடமேயில்லை. தொடர்ந்தும் அமெரிக்கா தலைமை தாங்க வேண்டுமானால் அத்தகைய முடிவுக்கு மீண்டும் வரவேண்டும். வந்தபின் அதற்கேற்ப தீர்க்கமான முடிவுகளை எடுத்து அவற்றினை நடைமுறையிட வேண்டும்.

முடியாது என்கிறார். உலகம் போர் செய்யும்போது நாம் அமைதியாக இருக்க முடியாது. நோயுற்று சீரழியும் நிலையில் உலகப் பொருண்மியம் இருக்கும்போது எமது பொருண்மியத்தை ஆரோக்கியமானதாக வைத்திருக்க முடியாது என்கிறார். அத்தோடு மாற்றுக் கருத்தாக முன்வைக்கப்படும் சோவியத்தின் வீழ்ச்சியின் பின் அமெரிக்க சருவதேசதலைமை அவசியமற்றது; பனிப்போரின் முழுச் சுமையையும் முன்னர் அமெரிக்காவே தாங்கியது. இப்போது ஏனைய நாடுகளும் சுமையை பங்கிடட்டும்; அமெரிக்க உள்நாட்டு நிலை மோசமடைகிறது. மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்கின்றது. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் நிதி நெருக்கடி இவற்றால் முன்னர் போல் வெளிவிவகாரங்களில் அதிக கவனம் செலுத்தமுடியாது என்கிற காரணங்களை நிக்சன் முற்றாக மறுக்கிறார். அமெரிக்காவைத் தவிர வேறு எந்த நாடாலும் தற்போதையநிலையில் தலைமை தாங்க முடியாது என்கிறார்.

இதுவே தனது மரணப் படுக்கையில் இருந்து அமெரிக்க ஆட்சியாளர்க்கு நிக்சன் கூறிய அறிவுரையாகும்.

1968 - 1974 இடையில் சனாதிபதியாக பதவி வகித்த நிக்சன் தனது காலத்தின் பதிவுகளை அடியொற்றி சில அரசியல் பாடங்களை முன் வைக்கிறார். தனது பதவிக் காலத்திலேயே சீனாவோடான புதிய உறவினை ஆரம்பித்த நிக்சன் சீனாவோடான உறவே மிகப் பிரதானம் என்கிறார். தற்போது கிளின்டன் இவ்வுறவினை சரியாகக் கையாளவில்லையென்றும் எதிர்காலத்தில் சீனாவை புறக்கணித்தால் விளைவுகள் அமெரிக்காவிற்கே பெரும் பாதகம் என்றும் அடுத்தநூற்றாண்டின் மிகப் பெரிய முதலாளியமாக சீனாவே விளங்கும் என்கிறார் சீன தலைவர் மாவோ உடனான தனது உறவுகளை நினைவுகூரும்அவர் 1976 மாசியில் மாவோவை கடைசியாக சந்தித்தபோது இருநாடுகளும் உலக அமைதிக்காக ஒன்றுபட்டு முயல

(10ஆம் பக்கம் பார்க்க)

பாலகுமாரன்

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

# சிறுகதை

# சாணக்கியம்

கே. ஆர். டேவிட்

பாலசுந்தரத்தின் தாயை அழித்து, அவனது வீட்டை அழித்து, குடும்பத் தொழிலை அழித்து... அந்த இளம் இதயத்தைப் பாலை வனமாக்கிவிட்டு... இலவசப் புத்தகம், இலவச உடுப்பு, இலவச உணவு...! தமிழ் மண்ணில் எத்தனையாயிரம் பாலசுந்தரங்கள்...? கணேசனின் இதயம் சில வினாடிகள் தரித்து... மீண்டும் இயங்குகின்றது...!

ஃ ஃ

ஆரோக்கியமாக வளர்ந்த குழந்தை 'மூக்கும் முளியுமாக' நிற்பதுபோல், அந்தத் தேமாமரம் கிளை பரப்பி, மதாளித்து நிற்கின்றது. எல்லைக்குள் வேரூன்றி எல்லைக்கு வெளியே கிளைபரப்பி, நிழல் கொடுத்து நிற்கும் அந்தத் தேமாமரத்திற்கு வெள்ளைத் தொப்பி போட்டது போல் வெள்ளைப் பூக்கள் நிறைந்துபோயிருப்பது மிகவும் அழகாக இருக்கின்றது.

அந்தத் தேமாமரத்தின்கீழ் கணேசன் நிற்கிறார். நண்பன் ஒருவனின் வருகைக்காகக் காத்து நிற்கின்றார்.

கணேசன் நிற்கும் பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் பிரதான வாசலிலிருந்து கிட்டத்தட்ட பத்தடி தூரத்தில் ஒரு சீமெந்துத்தூண் நிமிர்ந்து நிற்கின்றது. மின்சார விநியோகத்திற்காக மின்சார சபையினால் வீதி ஓரங்களில் நாட்டப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான தூண்களில் இதுவும் ஒன்று.

கணேசன் அந்தத்தூணைப் பார்க்கிறார் மாங்கொடிகள் சுற்றிப்படர்ந்து தூணின் அரைப்பகுதி உயரத்தைமறைத்திருக்கின்றன... தூணின் உச்சியில் ஒரு காகக்கூடு...!

இலங்கை அரசு வடபகுதியில் மின்சாரத் தடையை ஏற்படுத்தி எத்தனை வருடங்களாகிவிட்டன.. கணேசனின் மனதில் ஏற்பட்ட விரக்தி உணர்வு, அவரது இதயத்துள் தேடலை நடத்துகின்றது.

'இனி எப்போதான் மின்சாரம் வருமோ...' இலங்கை அரசை மனதுக்குள் திட்டிக் கொள்கிறார்.

கைக்குட்டையால் நெற்றிப்பரப்பில் பனித்திருந்த வியர்வைத்துளிகளை அழுத்தித் துடைத்த கணேசன் ஒரு சிகரட்டை எடுத்து மூட்டுகிறார்

நீண்டு போயிருக்கும் அந்தப்பிரதான வீதியோடு 'தாயைத்தின்னி' பிள்ளை போன்றதொரு குறுக்கு வீதியொன்று சந்திக்கின்றது. சிறியதொரு முச்சந்தி. இந்தச் சந்தியில் இறந்துபோன ஒருவரின் ஞாபகமாகக் கட்டப்பட்ட ஒரு பஸ்தரிப்பு நிலையமும், அதற்கு முன்னால் ஒரு கடையும் அமைந்திருக்கின்றன. இந்தச் சந்தியின் சிறப்பு இவ்வளவுதான்.

இந்தக் குறுக்கு வீதியில் நடந்தால் இரண்டு வளைவுகளைத்தாண்டி கிட்டத்தட்ட இருபது யார் தூரத்தில் மிகப் பிரமாண்டமான மிகவும் அழகானதொரு மாடிவீட்டைக் காணலாம். இது ஒரு தனியார் மருத்துவமனை.

இந்த மருத்துவமனையின் பிரதான வாசலோடு வளர்ந்திருக்கும் தேமாமரத்தின் கீழ்தான் கணேசன் நிற்கிறார். அவரோடு வந்த நண்பன் மருந்தெடுப்பதற்காக உள்ளே சென்றுவிட்டான். அவனது வருகைக்காகவே அவர் காத்திருக்கின்றார்.

ஆறுமணிக்கு மேலிருக்கும் இருளுக்கும் ஒளிக்கும் வழமையாக நடக்கின்ற உக்கிரமான சமர். காலையில் ஒளி வெல்லும், மாலையில் இருள் வெல்லும்... என்றுமே தீராத சமர்... ஆனால் சமமான வெற்றி தோல்விகள் இயற்கையின் நியதி...!

இந்த மருத்துவ மனையின் நிர்வாகி இரவீந்திரன் தனது அலுவலகத்தினுள் அமர்ந்திருக்கின்றார். நிர்வாகியின் அலுவலகத்திலிருந்து கிட்டத்தட்ட பதினைந்தடி தூரத்திலேயே கணேசன் நிற்கின்றார். அலுவலகத்தின் முன் பக்கத்தில்அமைக்கப்பட்டுள்ள நீண்ட யன்னலுக்கூடாக இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர்.

''ஐயா ஜெனரேட்டறை ஸ்ராார்ட் ஆக்கட்டா...'' அங்கு வந்த பாலசிங்கம் இரவீந்திரனிடம் கேட்கிறான் பாலசிங்கம் இந்த மருத்துவமனையில் வேலைசெய்யும் ஒருஊழியன்.

'நேரங்கிடக்கு..' தனது கைக்கடிகாரத்தைப் பார்த்த இரவீந்திரன் கூறுகிறார். இரவீந்திரன்எதிலுமே மிகவும் நிதானமானவர் மண்ணெண்ணெய்யின் விலை மாத முடிவில் முதலாளிக்குக் கணக்குச் சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு அவருக்குண்டு!

இது தனியார் மருத்துவமனையாக இருந்தாலும் கணிசமானளவு நோயாளர் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகளை உள்ளடக்கியது. மாலை தொடக்கம் இரவு பத்துப் பத்தரை வரை ஜெனரேட்டர் வேலை செய்யும். மருத்துவமனைபூராவும்பிரகாசமாக இருக்கும் அதன் பின்பு ஒவ்வொரு கட்டிலோடும் ஒவ்வொரு லாம்பு எரிந்துகொண்டிருக்கும் லாம்புகள் மருத்துவ மனைக்குரியது.

நேரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. கணேசன் அதே இடத்திலேயே நிற்கின்றார் அவரது வலதுகைச் சுட்டுவிரலுக்கும், நடுவிரலுக்கு மிடையேயுள்ள சிகரட் எரிந்து கொண்டிருக்கின்றது.

நிர்வாகியின் அலுவலக வாசலோடு இணைந்துள்ள மதில்கரையோடு ஒரு வாலிபன் நிற்கின்றான். கணேசன் இந்தஇடத்திற்குவரும்போதே அந்த வாலிபன் அந்த இடத்தில் நின்றதைக் கணேசன் அவதானித்திருந்தார்.

அவன் - பாலசுந்தரம்

கதிரையிலிருந்த இரவீந்திரன் கைகள் இரண்டையும் மேலுயர்த்தி - உடலை நெளித்து விரல்களால் விரல்களை அமரித்தி நெட்டிமுறித்து வலுக்கட்டாயமாக வாயைத் திறந்து கொட்டாவி விட்டு... நிமிர்ந்தமர்கின்றார்.

இதுவரை மதில் கரையோடு நின்ற பாலசுந்தரம், இரவீந்திரனின் அழைப்பை எதிர்பார்த்து நின்றானோ - என்னமோ இப்போது எந்தவித அழைப்புமின்றி அலுவலகத்துள் நுழைகின்றான். இரவீந்திரனுக்கு முன்னால் மிகவும் பணிவோடு பாலசுந்தரம் நின்கின்றான்.

''என்ன தம்பி ''

''உங்களிட்டைத்தான் சேர் வந்தனான்...''

''என்ன விஷயம்..''

''இரவிலை நோயாளரைப் பராமரிக்க ஆக்களை ஒழுங்கு பண்ணிவிடுவியளாம் அதுதான்வந்தனான்...'' இதுவரை பாலசுந்தரத்தைச் சாதாரணமாகப் பார்த்துக்கொண்டிருந்த இரவீந்திரன், இப்போது புருவங்களை நெளித்து கண்களைச் சுருக்கி, கூர்மையாகப் பார்க்கின்றார் அவரது பார்வையில் எத்தனையோ கேள்விகள் முகிழ்த்து வெடிக்கின்கின்றன!

''பெயரென்ன ''

''பாலசுந்தரம் ''

''படிக்கிறீங்களா...''

''ஓம்...''

''மன்னிக்கவேணும். படிக்கிறவைக்கு நாங்கள் வேலை குடுக்கிறதில்லை...''

''சேர் நான் படிக்கிறது உண்மைதான்... நான் ஏன் வேலைக்கு வந்தனான் எண்டதைச் சொல்றன் கொஞ்சங் கேளுங்கோ சேர்...'' மிகவும் பரிதாபமாகப் பேசுகிறான் பாலசுந்தரம்.

''. தம்பி நீங்கள் என்ன காரணங்கள் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டம் — நீங்கள் போங்கோ..'' இரவீந்திரனின் பேச்சில் 'அப்பீலற்ற' முடிவுதொனிக்கின்றது. பாலசுந்தரம் வெளியே வந்து முன்பு நின்ற அதே இடத்தில் நிற்கிறான்.

''இலவசக் கல்வி இலவசப் புத்தகம் இலவச உடுப்பு இலவச உணவு ''அரசாங்கம்எவ்வளவுஉதவியளைச் செய்யிது வீட்டிலை இருந்து படிக்கத் தெரியாமல் வேலைக்கு வாறார் பொறுப்பில்லாத புள்ளையள் '' இரவீந்திரன் தனக்குத்தானே கூறிக்கொள்கிறார்.

கணேசன் சகலதையும் அவதானித்துக் கொண்டு நிற்கின்றார்.

இம் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்களில் உதவியற்றவர்களுக்கு அவர்கள் விரும்பினால் கூலி அடிப்படையில் பராமரிப்பு வசதியை மருத்துவமனை நிர்வாகம் செய்துகொடுக்கின்றது.

பராமரிக்க விரும்புபவர்கள் நிர்வாகியிடம் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொண்டு பிற்பகலில் வருவார்கள், தங்கியிருக்கும் நோயாளர்கள் தங்களுக்குப் பராமரிப்பாளர் தேவையென நிர்வாகியிடம் முறைப்பாடு செய்தால் அதற்கான ஒழுங்குகளை நிர்வாகி செய்வார்.

ஒரு இரவுக்கு நூறு ரூபா.

இந்த வேலைக்குத்தான் பாலசுந்தரமும் வந்து நிற்கின்றான்.

மதில்க் கரையோடு நின்ற பாலசுந்தரத்தைக் கணேசன் பார்க்கின்றார். கணேசனின் பார்வைக்கோடு, பாலசுந்தரத்தின் பாதாதி கேசம் வரை ஊர்ந்து வருகின்றது.

அரசாங்கம் மாணவர்களுக்கென்று இலவசமாகக் கொடுத்த துணிகளில் தைக்கப்பட்ட களிசான் சேட், முன்னோக்கி வளர்ந்த- அண்மையில் வெட்டப்படாமல் காதுச் சோணைகளைமறைக்குமளவிற்குவளர்ந்துவிட்ட தலைமயிர்... மூக்கடியில் அரும்பியிருக்கும் பூனை மயிர். பதினாறு வயதிருக்கும் அறுந்து ஊசி குத்தப்பட்ட பாட்டா செருப்புக்கள் கையில் ஒரு சீலைப்பை... அதற்குள் சில புத்தகங்கள் முகத்தில் வறுமையின் வடுக்கள்

படிக்க வேண்டிய நேரத்தில் வேலைக்கு வந்திருக்கின்றான் ...

கணேசனின் சிந்தனை துடிக்க ஆரம்பிக்கின்றது

அவரின் அனுபவக்கூர்மை, பாலசுந்தரத்தின் இதயத்தைக் குத்தி அவனது இதயப் பொக்கணைக்குள்ளிருக்கும் உண்மை உணர்வுகளை உறிஞ்ச முனைகின்றது.

கணேசன் சாதாரணமானவரல்ல

பாடசாலை மாணவனாக இருந்து, பல்கலைக்கழக மாணவனாகி, ஆசிரிய பதவியேற்று, அதிபராகி கல்வி அதிகாரியானவர் ஐந்து வயதில் பாடசாலைப் படிக்கட்டில் காலடி வைத்தவர் இன்றுவரை கல்வியோடு தொடர்புபட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றார் எத்தனையோ அனுபவங்கள் உள்வாங்கியவர் ''பழமும் தின்டு கொட்டையும் போட்டவர்'' என்று கிராமப்புறங்களில் கூறுவார்களே... கணேசன் அப்படிப் பட்டவர்!

ஒரு ஆணுக்குஇருக்கவேண்டிய உயரம். அதற்கேற்ற திடகாத்திரமான உடற்கட்டு. அடர்த்தியான, முன்னோக்கி வளர்ந்திருக்கும் கண்புருவ மயிர்கள், மயிர்க் கொட்டிகள் போன்ற உரோமம் அடர்ந்த கைகள் நரைத்த அடர்த்தி குறைந்த பக்கவகிடிட்ட தலைமயிர், தடித்த மீசை நாசுக்கான நாகரீகம் நிலாவரைக் கிணறுபோன்ற ஆழம் காண முடியாத பார்வை முற்றிப் பழுத்து உலர்ந்து எரித்தால் எண்ணை பிறக்கக் கூடிய 'செத்தல் தேங்காய் ! அப்படிப்பட்ட அனுபவசாலி!

கணேசனின் பார்வை இன்னமும் பாலசுந்தரத்தின் மீது நங்கூரமிட்டு நிற்கின்றது.

கணேசன் தன் கையிலிருந்த சிகரட்டை இறுதியாக உறிஞ்சி, புகையைச் சுவாசப்பை வரை உள்ளிழுத்து சிகரட் கட்டையை நிலத்தில் போட்டு சப்பாத்துக் காலால் மிதிக்கின்றார்.

வாழைத்தண்டின் வெட்டு முகத்தில் நீர் சுரப்பது போன்று அவரது இதயத்தில்பாலசுந்தரம் பற்றிய சில அபிப்பிராயங்கள் சுரக்கின்றனவே தவிர, நிதானமான எந்தத் தீர்மானத்திற்கும் அவரால் வர முடியவில்லை.

கணேசனின் மனமிதப்புத் துடித்துக் கொண்டேயிருக்கின்றது!

சுவர்க்கரையோடு நின்ற பாலசுந்தரம் திரும்பவும் நிர்வாகியின் அலுவலகத்துள் நுழைகின்றான்.

''சேர் ''

''என்ன தம்பி ''

''சேர் என்னை வேலைக்கு விடுங்கோ சேர் 'மிகவும் இரந்து கேட்கின்றான் பாலசுந்தரம். இரவீந்திரனின் முகத்தில் சிறிது எரிச்சல் உணர்வு படர்கின்றது. கையிலிருந்த பேனையை மேசை மீது வைத்துவிட்டு பாலசுந்தரத்தை ஏற இறங்கப் பார்க்கின்றார். அவரது பார்வையில் பலவித உணர்வுகள், முரல் மீனாய் குத்திமறைகின்றன. கைகளைப் பொத்திப் பிடித்து உதட்டருகே வைத்து பொங்கி வந்த கொட்டாவியை மிகவும் நாகரீகமாக வெளிவிட்டுப் பேச ஆரம்பிக்கின்றார்.

'தம்பி நீங்கள் படிக்க வேணுமென்டதுக்காகத்தான் அரசாங்கம் எல்லாத்தையும் இலவசமாய்த் தந்திருக்கு அரசாங்கத்துக்கும் துரோகம் செய்து உங்களைப் பெத்ததுகளுக்கும் துரோகம் செய்து இஞ்சை வேலைக்கு வந்திருக்கிறியளே இது சரியா '

'சேர் நீங்கள் சொல்றது சரிசேர் நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்கோ 'முதல் தடவை கூறியது போலவே இப்போதும் மிகவும் இரந்து கூறுகிறான் பாலசுந்தரம்.

'தம்பி நீஎதுவும் கூற வேண்டாம். உன்ரை படிப்புக் கெட்டுப் போறதுக்கு நான் உடந்தையாக இருக்கமாட்டன் நீங்கள் போகலாம் ' இப்படிக் கூறிய இரவீந்திரன் பாலசுந்தரத்தின் பதிலுக்காகக் காத்திராமல் பேனையை எடுத்து எழுத ஆரம்பிக்கின்றார்.

பாலசுந்தரம், வேதனையோடு, திரும்பவும்அந்த மதிற்கரையில் வந்து நிற்கின்றான்.

'சேர் நான்சொல்றதைக் கொஞ்சம் கேளுங்கோ '' பாலசுந்தரம் இரண்டாவது தடவையாகவும் கூறிய இந்த வாக்கியம் வண்டாகி கணேசனின் செவிப்பறையைக் கடித்து இதயத்துள் நுழைகின்றது.

பாலசுந்தரம் எதைக் கூற விரும்புகிறான்?...

''சேர் ஜெனரேட்டரை இயக்கட்டா'' அங்கு வந்த பாலசிங்கம் கேட்கஇரவீந்திரன் அனுமதியளிக்கின்றான். சில நிமிடங்களில் ஜெனரேட்டர் இயக்கப்பட்டு மருத்துவமனை முழுவதும் பிரகாசமாகின்றது.

பாலசுந்தரம் ஒவ்வொரு பல்ப்புகளையும் ஆவலோடு பார்க்கிறான் அவனது முகத்திலே ஏதோ ஒருவித ஏக்க உணர்வு தளம்புகின்றது.

கணேசனின் பார்வை மீண்டும் பாலசுந்தரத்தின் மீது நங்கூரமிடுகின்றது. மீண்டும் ஒரு சிகரட்டை எடுத்து மூட்டுகின்றார்.

கணேசன் பாலசுந்தரத்தை தனக்கருகில் அழைக்க பாலசுந்தரம் பணிவோடு அவருக்கருகில் வந்து நிற்கின்றான்.

''படிக்கிறீங்களா ''

''ஓம் சேர் '' என்ன வகுப்பு படிக்கிறீர்கள் ''

''ஓ எல் ''

''இந்த முறை எடுக்கிறீங்களா ''

''ஓம்...''

''அப்பா என்ன வேலை..''

''விறகு கட்டப் போறவர்.. ''

''அம்மா ''

''அம்மா செத்துப்போனா ஆமிக்காரர் சுட்டவங்கள்''

''சொந்த வீடிருக்கா...''

''இல்லை சேர் இந்த ரோட்டிலை ஒருபள்ளிக்கூடம் இருக்கு அதுக்குப் பக்கத்திலை உள்ள கல்லுரோட்டிலை போனால் ஒரு குடியேற்றத் திட்டமிருக்கு அங்கதான் இருக்கிறம் ''

''சொந்த இடம் ''

''இளவாலை அங்கை எங்களுக்குச் சொந்தமாய் வீடிருந்தது சொந்தமாய் தோட்டக்காணியிருந்தது அப்பா வெத்திலைத்தோட்டம்செய்தவர் நல்லவருமானம் நல்லாய்த்தான் இருந்த நாங்கள் இப்ப வீட்டிலை, தோட்டமில்லை, உழைப்பில்லை அம்மவும் இல்லை

ஆமிக்காறர் வாறாங்களெண்டு சனங்கலெல்லாம் ஓடிச்சிதுகள் நாங்களும் ஓடினம் அம்மாவும்எங்களோடை ஓடிவந்தவ கொஞ்சத்தூரம் வந்து பார்த்தால் அம்மாவைக் காணயில்லை துவக்கு வெடி கிட்டக்கிட்ட கேட்டிது அதாலை திரும்பிப் போகேலாமல் போச்சிது அம்மாஎப்பிடியும் வருவா எண்ட நம்பிக்கையிலை வந்தம் ..

அங்கையிருந்து ஓடிவந்து சண்டிலிப்பாய் பள்ளிக்கூடத்திலை இருந்தம் பிறகு மானிப்பாய் அந்தோனியார் கோயிலிலை இருந்தம்... பிறகுதான் இஞ்சை வந்தம்...

நாலு மாதத்துக்குப் பிறகு இளவாலையிலை இருந்து ஒரு சுவாமியார் வந்தவர் அவரைப் போய் சந்திச்சம் அவரிட்டைஇளவாலையிலை செத்துப்போன ஆக்களின்ர விபரமெல்லாம் இருந்தது அதிலை அம்மாவின்ர பெயரும் இருந்தது ஆமிக்காரர் சுட்டவங்களெண்டு சுவாமியார் சொன்னார் பாலசுந்தரம் தனது சோகக் கதையைக் கூறிமுடிக்கிறான்.

தேநீருக்குள் விழுந்தபாண் துண்டு ஊறிப் பிய்வதுபோல் கணேசனின் இதயம் வேதனையில் ஊறிப்பிய்கின்றது கையிலிருந்தசிகரட்டைக்கூட கணேசன் மறந்துபோய்விட்டார். சிகரட் எரிந்து சாம்பல் உதிர்ந்துகொண்டிருக்கின்றது.

கணேசன் மாணவர் உலகத்தைமட்டுமல்ல - மனித உலகத்தையும் சரியாக உமிழ்ந்த அனுபவம்மிக்கவர் பாலசுந்தரத்தின் உணர்வுகளை அணு அணுவாகப் புரிந்து கொள்கிறார்.

கணேசனால் தொடர்ந்து பேசமுடியவில்லை.

சில வினாடிகள் கணேசனுக்கருகில் மௌனமாக நின்ற பாலசுந்தரம் என்னத்தை நினைத்துக் கொண்

(10ஆம் பக்கம் பார்க்க)

**SHAMROCK**

யாழ். சுண்டுக்குளி

**A/L 96**

ஆரம்பமாகியுள்ளது

CHEMISTRY-

Mr. மகேஸ்வரன் B.Sc (Hons)

PHYSICS-

Mr. மோகன் B.Sc

(8385)



## ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்கான

# இன்னிசை கானம்

சாந்தன் இசைக்குழுவினர் ராஜன் இசைக்குழுவுடன்

ஒரே மேடையில் வழங்குகின்றார்கள்.

இடம்: நாவற்குழி மகாவித்தியாலயம்

காலம்: 27-05-1994

நேரம்: பி. ப. 7 மணி

சிந்தைக்கினிய சிறார்களுக்கு உதவுங்கள். (8386)


## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

கருகப்பை ஈஸ்வரன் தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் அன்று நடைபெற வில்லை; எதிர் வரும் 26-6-94 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி

(8392) ஆலய பரிபாலனசபை


# கொழும்பு ஸ்ரூடியோ

தொழில் நுட்பத்தில்

35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்

தரமான

- Line, Half-tone and Colour Blocks
- றபர் சீல் Rubber Stamps
- சில்க் ஸ்கிறின் Silk Screen
- Re copy பழைய படங்களில் இருந்து புகைப்படங்களைப் பெரிதாக்க

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் தரமாகப் பெற்றுக்கொள்க,

**கொழும்பு ஸ்ருடியோ**

55, மணிக்கூட்டு வீதி. (சி-9395) யாழ்ப்பாணம்


## 1 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



திருமதி

**கணேஸ்வரி (பேபி) தனபாலசிங்கம்**

தாயின் மடியில் 19-12-1938 — மண்ணின் மடியில் 08-06-1993

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறுதி மூச்சுவரை எம்மை வளர்த்து அறிவினைப் புகட்டி அன்பினைப் பொழிந்து அகிலத்தில் நம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே அம்மாவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

மெக்கானிக் தனபாலசிங்கம், கணவன், பிள்ளைகள்,
பெருமாள்கோவில் உறவினர், நண்பர்கள்.
தெற்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி-9517)

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

# பதவி வெற்றிடங்கள்

## 1. லொறிச் சாரதி 2. லொறிச் சுத்திகரிப்பாளர்

## விண்ணப்பங்கள் கோரல்

எமது சங்கத்தில் வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகட்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்க தொழிற்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ 10-06-1994 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 5/- செலுத்தி சங்க காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ஏற்கெனவே விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் புதிதாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.)

**1. லொறிச் சாரதி (தற்காலிகமானது)**

குறியீட்டு இல: 312/11

சம்பளத் திட்டம் - 255 — 12.50×8, 15×7 — 460 (அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

கல்வித் தகைமை - 8ஆம் வகுப்பு சித்தி அத்துடன் கனரக வாகன ஓட்டுநர்க்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது - 30 தொடக்கம் 40 வரை

**2. லொறிச் சுத்திகரிப்பாளர் (தற்காலிகமானது)**

குறியீட்டு இல: 314/14

சம்பளத் திட்டம் - 195 — 10×10, 12.50×4 — 345 (அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

கல்வித் தகைமை - அ) கூட்டுறவு பணியாளர் 15-வது சம்பளத் திட்டத்தில் ஒரு வருடம் கடமையாற்றிய அனுபவம்
அல்லது
ஆ) 8-ம் வகுப்பு சித்தி

வயது - 23 தொடக்கம் 40 வரை

விண்ணப்பப் படிவங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் (Photostat copy) விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம், பொது முகாமையாளர்
மருதனாமடம்,
இணுவில். (சி-9510)

# 31.ம் நாள் நினைவஞ்சலி



**செல்வி வசந்தநாயகி சின்னத்தம்பி**

(வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி கணக்கு பதிவாளரும் யாழ் கூட்டுறவுக் கல்லூரி உயர் பிரிவு மாணவியும்)

பிறப்பு: 24-2-1969 — மறைவு; 28-4-1994

நித்தம் நீ வருவாய் கொத்தணியாசலிலே
திக்கம் வடிசாலை தேங்கச்சிரிப்பாயே
அர்த்தம் தொனித்திடவே அழகாய்க் கதைப்பாயே
பித்தம் பிடித்தழுகிறோம் சோதரி
உன் பிரிவால்-நாம இங்கு

திக்கம் பணிப்பாளர்
அல்வாய் பணியாளர்
வடமராட்சி கொத்தணி.

(5885)

# பொழிவு - நாவண்ணன்

## ஓர் உளப் பார்வை

உள்ளத்து நல் உணர்வுகளை
உள்ளபடி தெள்ளு தமிழ்
வண்ணம் மிகு சொற்களால்
வடிவமைத்து கள்ளமில்
நெஞ்சங்கள் கட்டி அணைக்க,
எண்ணங்கள் நேரே இனிய
நடை போடப்
பண்ணுவதே கவிதை என்றால்
அதைத்தேடி அலைய வேண்டா.
புகுந்திடுங்கள் நாவண்ணன்
பொழிவுக் கவிதைப் பூங்காவினிலே
நேராக நம்மை இவர் சேர்க்கின்றார்
பாராளத் தமிழை தனித் தவிசு
ஏற்றி வைத்து தமிழ்த் தூதாக
நின்று எட்டுத் திக்கும் ''இவர்''
தமிழ் மணக்க வைத்தார் கேளிர்!
பேர் தெரியா நாடெல்லாம்
பேச வைத்தார் நம் தமிழை
அவர் பெயரை தனி நாயகத்தை
காலி முகத் திடலில் காலிகளின்
கைத் தடிக்கும் நாணாத தமிழ் மகனை
நாட்டின் கலைப் பெருமை
நாநிலமும் அறிய வைத்த நல்ல
தனி நாயகத்தை நாம் மறத்தல்
சால்போ எனக் கேட்டே;
அடுத்து
முத்தமிழ் விழா முன்றில் எமை நிறுத்தி
முத்துத் தமிழ், அன்னைத்தமிழ்,
கொஞ்சு தமிழ், விஞ்சுதமிழ் ஆனால்
இது ''வஞ்சகர் தமை துஞ்சச் செயும்
நஞ்சு தமிழ்'' என்றுபாடி
நம்ம தமிழ் துஞ்சாத் தமிழ் ஆக
வழி சொல்கின்றான் நாவண்ணன்.
மண்ணை மீட்கத் தன்னைத் தந்த
மைந்தர் புகழ் ''பாடடா'' நாம்
''வாழும் நாட்டில் (நாம்) வாழ யுத்தம்
நாளும் நடக்கும் வேளையில்''
ஓடித் தம்மை வாழ வைக்கும்
கோழைத் தன்மையைச் சாடி
''வைத்தியசாலைக்குள்வானரங்கள்போல்பாய்ந்து
பைத்தியச் செயல் புரிந்த பாதகக் கும்பலே''
என்று
''அஞ்சிடல் இனி எமக்கு வேண்டாம்
துஞ்சிடல் யாவர்க்கும் உண்டு
எஞ்சி எம் ஈழத்தில் வாழும்
பிஞ்சுகள் சுதந்திரம் காண
நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்''
என்று நம் இருட் சிந்தை தெருட்டி;
கம்பன் மேடைகளில் எம்மைக்
கவிமழை தோயச் செய்யும் கவிஞன்
''வாயை வீசியல்ல வாளை விசியே - பல
வாகை கொண்டவன் தமிழன்'' - அவன்
என்ன விலை தான்கொடுத்தும்
மண்ணை விடுவிப்பமென
திண்ணமுடன் காத்திருக்கும் காளைகளை
நம்புங்கள் தமிழ் ஈழம் நாளை பிறக்கும்
என்ற நம்பிக்கை தானுரைத்து
அத்'தை மகளை' - அத்தை மகளாய்
உருவாக்கி அழகு தமிழ் சொற்களால்
''பல வயது குறைந்து
பருவத்தில் இளமையுற்ற'' நிலைதன்னை
''அத்தை மகள் அவளெனது
ஆத்மாவின் கீதமென'' -பருவத்தில்
இளமை உற்றாலும் கவிதை முற்றி
முறுவலிக்கும் சித்திரங்கள்
பல காட்டி-
தன் ஆவிக்குள் தமிழ் இருந்து
ஆர்ப்பரிக்கும் நிலையை
''காப்பியை உறிஞ்சும் என் உதடு -அவள்
கவர்ச்சியை உறிஞ்சும் என் விழிகள்''என
கொஞ்சு தமிழால் என் நெஞ்சம் குளிர்வித்து
மேலும்-
தந்திக் கம்பத் தூதால் நல்ல தமிழ்ச்
சால்பு எல்லாம் எடுத்து இயம்பி
வள்ளுவன் யேசுபிரான் ஆடவல்லான்
அனைவரையும் முன் நிறுத்திச் சொன்னான்
கவிதை நாவண்ணன். இவன் பாவண்ணன்
நிறைவாக-
கம்பனை விஞ்சியிவன் காட்டுகின்ற
அவலச்சுவை இரும்புக்கு நெஞ்சிருந்தால்
உருகி மாய்ந்திடுமே!
நாவண்ணா நின் கவிதை
நான் கலந்து பாடி நயந்து
நீயாக தேனின் சுவையும்
கொடும் ஆலம் தன்சுவையும்
ஒருங்கே சுவைத்துக் கவிதை
வான் சுவையும் மண்டி
உன் தனுக்கு நான் தருவது
என்?
செந்தமிழ்க் கவி வண்ணம் காட்டும்
பெரும் தமிழ்ப் புலவோய்-வாழ்க
நீ தமிழ் போல் என்றும்.

— க. சிவராமலிங்கம் பீ. ஏ.


## புளொக் செய்வதற்கு நாடுங்கள்

- அச்சக வேலைக்குத் தேவையான காப்ரோன் புளொக்குகள் அனைத்தும் அழகிய முறையில் செய்து கொடுக்கப்படும்.
- பத்திரிகை விளம்பரம் மற்றும் அச்சக வேலைக்குத் தேவையான புளொக்குகளும் உடன் செய்து கொடுக்கப்படும்.
- ஸ்கிரீன் பிரிண்ட் வேலைக்குத் தேவையான பொசிடிவ்களும் உடனுக்குடன் எடுத்து தரப்படும்.

**அழகன் புளொக் தயாரிப்பாளர்கள்**
[ஈழநாதம் அலுவலகத்திற்கு அருகில்]
27/7, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
(இ)


# யாழ். மருந்தகங்களில் இருந்து கருத்தடை தடுப்பூசி பறிமுதல்

(நமது நிருபர்)

தனியார் மருந்தகங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்த கருத்தடை தடுப்பூசி மருந்தான டிப்போ புறோவீரா யாழ். பிராந்திய உணவு மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியினால் திடீர் சோதனை செய்யப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து மருந்து தொழில்நுட்ப விநியோக பணிப்பாளரினால் யாழ் பிராந்திய உணவு மருந்து கட்டுப்பாட்டதிகாரி திரு. மகாதேவனுக்கு அனுப்பப்பட்ட அறிவுறுத்தலுக்கு இணங்கவே அவரால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இது பற்றி கருத்துத் தெரிவித்த திரு. மகாதேவன் இத் தடுப்பூசி மருந்து அரச மருத்துவ மனைகளாலும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினால் நடாத்தப்படும் குடும்பநல சேவை நிலையங்களாலும் மற்றும் குடும்ப கட்டுப்பாட்டு சங்கத்தில் பதிவு செய்து கொண்ட விநியோகஸ்தர்களாலும் மட்டுமே இது தேவையானோருக்கு பாவிக்கப்பட்டு வந்தது. இருந்தும் எவ்வாறு தனியார் மருந்தகங்களுக்கு கிடைத்ததென்பது அதிர்ச்சி தரும் விடயம் என்றார்.

இதேவேளை இத் தடுப்பூசி மருந்தை மலர் அன் பிக்ஸ் சிலோன் லிமிடெட் நிறுவனம் மட்டுமே இறக்குமதி செய்வதாகவும் அப்ஜோன் பெல்ஜியம் நிறுவனமே இம் மருந்தை உற்பத்தி செய்வதாகவும் தற்போது கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் தனியார் மருந்தகங்களில் விற்பனை செய்யப்படும் இத் தடுப்பூசி மருந்து போலியானதா என சந்தேகப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி தடுப்பூசி மருந்து 14 மருந்தகங்களில் திடீர் சோதனை மேற்கொண்ட போது 215 குப்பிகள் கைப்பற்றப்பட்டதாகவும் இவற்றில் ஒருசிலவற்றை கொழும்பிற்கு அனுப்பி பரிசோதனைக்குட்படுத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து ஏப்பிரல் 21 என திகதியிடப்பட்ட கடிதம் கடந்த 13ஆம் திகதி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு கிடைத்ததை அடுத்து 18ஆம் திகதி உணவு மருந்து கட்டுப்பாட்டதிகாரியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. [சி],[நி]

## தபால்கள் வந்தன

(வடமராட்சி)

''கோமாரி'' கப்பலில் யாழ். மாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்ட 199 தபாற் பொதிகளும் நேற்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு கரைக்கு எடுத்து வரப்பட்டது. (யோ)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

திருஞான சம்பந்த சுவாமிகள் குருபூசை நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இக் குருபூசையினை சைவ பரிபாலன சபையுடன் இணைந்து பாலர் கல்விக் கழகம் நடாத்துகின்றது. காலை 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை வரை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. காலை நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்களின் பண்ணிசையும் மாலை நிகழ்வில் செல்வி இ. உமாராணி, திருமதி க. நிரஞ்சனா ஆகியோரின் பண்ணிசையும் இடம்பெறவுள்ளன.

## புத்தகம் கொள்வனவு செய்ய ச.ச. நிலையங்களுக்கு நிதி

யாழ்ப்பாண பிரதேச செயலரின் பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து ஒவ்வொரு சனசமூக நிலையமும் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்காக தலா ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் யாழ்ப்பாண பிரதேச செயலரின் பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் தாம் கொள்வனவு செய்யவுள்ள புத்தகங்களின் பட்டியலை சமர்ப்பிப்பதன் மூலம் இந் நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கூறப்படுகின்றது.

## சிறுவர்களின் கல்வியில் விளையாட்டு அவசியமாகும்

-பிரதேச செயலர் சந்திரராசா

சிறுவர் கல்வியில் விளையாட்டு நிகழ்ச்சிகள் அவசியமான தொன்றாகும். ஆரம்பக் கல்வியும், அதன் ஈடேற்றமும் விளையாட்டிலேதான் தங்கியுள்ளது.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை அன்று தொல்புரம் விக்னேஸ்வரா சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் சங்கானை பிரதேச செயலரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு. கா. சந்திரராசா அவர்கள் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இதுவரை நான் பல பாலர் விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளேன். இந்த பாலர் பாடசாலைச் சிறார்களின் விளையாட்டுத் திறன் நன்றாய் உள்ளது. இது போன்று மேற்படி சனசமூக நிலையமும் அதிகளவு பொதுப் பணிகளில் ஈடுபட்டு வருவதையும் பாராட்டினார். அத்தோடு மேலும் இந்த நிலையமும், பாலர் பாடசாலையும் ஓங்கி உயர்ந்திட தன்னாலான ஒத்துழைப்பை நல்குவதாக தெரிவித்துக் கொண்டார்.

மேலும் நிலையத் தலைவர் திரு. பா. நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தொல்புரம் கிராமியப் பொறுப்பாளர் திரு. சி. கீரன், மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலைய இயக்குனர் திருமதி இ. பொன்மலர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய பாலர்களுக்கான பரிசில்களை திருமதி சந்திரராசா அவர்கள் வழங்கி கௌரவித்தார். (41)



## கண்ணீர்க் காணிக்கை

## ஸ்ரீமான் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

நீர்வேலி கந்தசாமி தேவஸ்தான பரிபாலன சபை நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், மேற்படி பரிபாலன சபை சிறப்புறச் செயற்படுவதற்குத் தம்மை அர்ப்பணித்தவரும், கணக்காய்வாளராகக் கடமையாற்றியவருமான நீர்வேலி தெற்கு வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களும், அன்னாரது ஏக புத்திரியும், மருமகளும் 22-05-1994 இல் அகால மரணமடைந்ததையிட்டு எமது சபை ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா கலியுகவரதனாம் முருகன் திருவடியை அடைந்து பேரின்ப வாழ்வை அடைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி!

நீர்வேலி,
23-05-1994

பரிபாலன சபை
நீர்வேலி ஸ்ரீ கந்தசாமி தேவஸ்தானம்
(8398)

# மூக்கிய அறிவித்தல்

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

28-05-1994ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த பின்வரும் கிளைகளுக்கான கிளைக்குழு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

கிளை 1. தெல்லிப்பளை
கிளை 14. கொல்லங்கலட்டி
கிளை 26. மயிலிட்டி வடக்கு
கிளை 29. வீமன்காமம்

1994-05 26
மானிப்பாய். (சி 9528)

எ. சின்னத்தம்பி
தேர்தல் உத்தியோகத்தர்

# 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
15. 04. 1918

உதிர்வு
27. 04. 1994

அமரர்
## சுவாமிநாதர் செல்லையா

27.04 94 அன்று அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 27.05 94 இன்று வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. 8389)

## சாணக்கியம்

டானோ - திரும்பவும் இரவீந்திரன் அலுவலகத்துள் நுழைகின்றான்.

இரவீந்திரன்மேற்கண்ணால் பாலசுந்தரத்தை பார்த்துவிட்டு எதுவுமே பேசாமல் தனது வேலையில் ஈடுபட்டிருக்கின்றார்.

'சேர்... மூன்றாவதுதடவை ...அதே இரக்க உணர்வு நிறைந்த குரல்

''என்ன...'

''எனக்கு சம்பளம் வேண்டாம் சேர்...''

இரவீந்திரன் எதுவுமேபேசவில்லை தனது வேலையில் ஈடுபட்டிருக்கின்றார்.

''சேர்...'' திரும்பவும்அழைக்கின்றான் பாலசுந்தரம்.

''என்ன...''

''எனக்குச் சம்பளம் வேண்டாம்சேர்...'' இரவீந்திரனின் செவிப்பறையில் பாலசுந்தரத்தின் பேச்சொலிகள் பதியவில்லை.

''தம்பி... என்னை வேலை செய்ய விடுங்கோ தொந்தரவு செய்யாதைங்கோ...''

சிறிது கடுமையாக இரவீந்திரன் கூற பாலசுந்தரம் ஏமாற்றத்தோடு அலுவலகத்தைவிட்டு வெளியே வருகிறான். வந்தவன் கணேசனுக்கு கிட்டவாக நிற்கின்றான்.

''எனக்குச் சம்பளம் வேண்டாம் சேர்...'' பாலசுந்தரம் கூறிய இந்தவாக்கியம் கணேசனின் இதயத்தில் உண்ணி போல் ஒட்டிக் கொண்டு கடிக்கிறது...!

வாழ்க்கையில் பெரும் வறுமை.... நோயாளரை பராமரிக்க வந்திருக்கின்றான்... சம்பளம் வேண்டாம் என்று கூறுகின்றான்.

புரிய முடியாத எத்தனையோ இதயங்களின் நாடித் துடிப்புகளை இரண்டொரு பார்வையில் புரிந்து கொண்டு விடுகின்றகணேசன்.. குழம்பிப் போய் நிற்கின்றார்!

கணேசனின் பார்வை மீண்டும் பாலசுந்தரத்தின் மீது நங்கூரமிடுகின்றது.

இருவரது பார்வைக்கோடுகளும் சந்திக்கின்றன. கணேசனின் பார்வையில் விசாரணை உணர்வு... பாலசுந்தரத்தின் பார்வையில் விரக்தி உணர்வு...!

''தம்பி...'' கணேசன் மீண்டும் பேச்சைத் தொடங்குகின்றார்.

''சேர்...''

''என்ன கடுமையாய் யோசிக்கிறியள்...''

''யோசிச்சு என்ன செய்யிறது...''

''இலவசமாய் வேலை செய்ய வந்தீங்களா?'' கணேசன் இப்படிக் கேட்டதும் பாலசுந்தரம் கணேசனைப் பார்க்கின்றான்... மூக்கடியிலுள்ளபூனைமயிருக்குள் வியர்வைத் துளிகள் பனிக்கின்றன... அவனது உதடுகள் துடிக்கின்றன... குரல்வளையின் அடியிலுள்ள ஒரு ரூபா குத்தியளவிலான சிறியகுழி.. வெட்டப்பட்ட ஆமையின் ஈரல் துடிப்பது போல் துடிக்கின்றது ..

குழந்தையின்பிரசவத்திற்கு முன் - தாய்க்கு ஏற்படுகின்ற நோக்காட்டுக்குத்துப்போல்... சில உண்மைகளை பிரசவிக்கப்போகின்ற சில உணர்வுகள் அவனது முகத்தில் பளிச்சிடுவதைக கணேசன் அவதானித்துக் கொண்டு பேச்சை தொடர்கின்றார்...

''வேலைதரமுடிய தெண்டு மனேஜர் சொல்லிப்போட்டாரா... கணேசன் பரிவோடு கேட்கிறார்.

''ஓம் சேர் ''

''வீட்டில கஷ்டந்தானே''

''ஓம் சேர்..''

அப்ப சம்பளம் வேண்டாமெண்டு சொன்னீங்களே ''..

''வீட்டில சரியான கஷ்டம் தான்சேர்.. நான் அதுக்காக வேலைக்கு வரயில்லை ..''

''அப்ப... ஏன் வேலைக்கு வந்தீங்கள்..''

''சோதினைக்கு இன்னும் இரண்டு மாதம் இருக்கு சேர்.. இரவிலை படிக்கிறதெண்டால் மண்ணெண்ணை வேணும்... மண்ணெண்ணை வாங்க வசதியில்லை... இஞ்சையெண்டால் நோயாளியையும் பராமரித்து வெளிச்சத்திலை படிக்கலாமெண்டதுக்காகத் தான் சேர் 'புத்தகமும்' கொண்டு வந்தனான்...'' பாலசுந்தரம் கூறிவிட்டு கணேசனைப் பார்க்கின்றான். இயலாமை உணர்வு மேலீட்டால், அவனது நாடிமுனையிலுள்ள தசை சுருங்கித் துடிக்கின்றது...!

கணேசனின் இதயம் சில விநாடிகள் தரித்து.. மீண்டும் துடிக்கின்றது

கணேசன் பரிவோடு பாலசுந்தரத்தின் கையைப் பிடிக்கின்றார்!

நோயாளியையும் பராமரித்து வெளிச்சத்திலை படிக்கலாமெண்டதுக்காகத் தான்... புத்தகமும் கொண்டு வந்தனான்.'' பாலசுந்தரத்தின் இந்தப் பேச்சு கணேசனின் செவிப்பறையை கொதிநீராய் அவித்துக் கொண்டிருக்கின்றது!

# தவறிவிட்டது

சிவகுருநாதன் சக்திவேல் ஆகிய எனது கடவுச்சீட்டு (இல Ko.294144) கொழும்பு மஸ்கற் ஒருவழி உபயோகிப்பதற்கான பயணச்சீட்டு என்பனசிறிய கைப்பையுடன் முறிகண்டியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்' சன்மானம் வழங்கப்படும்.

தகவல்
சி. சக்திவேல்

(8393)

## அமைதிக்கு

வேண்டும் என்றபோது நான் எதிர்பாராத வகையில் அமைதிமட்டும்தானா உமது இலக்கு எனக்கேட்டு தன்னை திக்குமுக்காடச் செய்தார்.

ருஷ்ய உறவிற்கும் முக்கியம் கொடுக்கும் அவர் யெல்சினின் போக்கை ஆதரித்தாலும் மேற்குலகம் யெல்சினோடு மட்டும் நின்றுவிடாது ருஷ்யாவில் உருவாகும் புதிய தலைமையை கவனத்தில் எடுத்து அவர்களோடும் தொடர்புகளைப் பேண வேண்டும் என்கிறார். ஏனென்றால் மறுபடியும் ருஷ்யா வலிமையுடன் மேல் எழும் என அவர் கருதுகிறார். இத்தோடு இசுலாமிய உலகம் பற்றியும் நிக்சன் கருத்து வெளியிடுகிறார். பொசுனிய முசுலிம்கள் விடயத்தை சரிவர கையாளாவிட்டால் ஒரு பண்பாட்டு மோதலுக்கு மேற்குலகம் இசுலாமிய உலகோடு மோத வழிவகுத்துவிடும் என்றும் பாதிக்கப்பட்ட இசுலாமிய நாடுகள் குறித்து கவனமாக செயற்பட வேண்டும் என்றும் பொசுனிய முசுலிம்கள் சேர்பிய கிறிஸ்தவர் மோதல்கள்- முசுலிம் அசர்பையான்- கிறிஸ்தவ ஆர்மீனியா மோதல்கள், லெபனான் மோதல்கள், தஜிகித்தான் மோதல்களை சுட்டிக்காட்டி இவற்றினை சரிவரக் கையாளாவிட்டால் ஏற்படும் விளைவுகள் பாதகமாகும். முன்னர் போல இரு பண்பாட்டு குழும மோதலாகிவிடும் என எச்சரிக்கிறார்.

நிக்சனின் இப்புதிய கூற்றானது நிச்சயமாக பலத்த விவாதத்தை உலகெங்கும் கிளப்பப் போகின்றது. அமெரிக்க மேலாண்மை அதனால் பனிப்போர் காலத்தில் விளைந்த தீர்வுகள் வியட்நாம்போர் பற்றியெல்லாம் பழைய வரலாறுகள் மீண்டும் கிளறப்படலாம். அமெரிக்க ஆளும் வர்க்கமோ தமது முன்னைய பொற்காலம் குறித்தும் இனி அது மீண்டும் வருவது குறித்தும் சிந்திக்கதலைப்படலாம். ஆனால், அமைதிக்கு அப்பாலும் அமெரிக்கர் சிந்திக்கும் போது அமைதியே காணாது அடக்கு முறைக்குள்ளாகி போகும் மக்கள் அமைதியே அன்றி வேறு எதைப்பற்றி சிந்திக்க முடியும்?


## தேடல் - 3

தேடல் ஒன்றாக இரட்டைச் சூட்டடுப்பும்,
தேடல் இரண்டாக ஆக்கிவாயுவும்,
வெற்றிநடை போடும் இவ்வேளையில்,

## இதோ - தேடல் - 3

"காற்றுவலு இயந்திரங்கள்"

எரிபொருட் தடையால் ஏங்கும் விவசாயிகளே,
மின்கலங்களை மின்னேற்றிப் பாவிக்கதுடிப்பவர்களே
உங்கள் சுமைகளைப் போக்கிச் சுகமாக்க வந்துள்ளது

"காற்றுவலு இயந்திரங்கள்"

- நீரிறைக்க
- மின்பிறப்பாக்க
- மின்கலங்களுக்கு மின்னேற்ற

"காற்றுவலு இயந்திரங்கள்"

உங்கள் தேடலுக்கு எங்கள் முகவரி:-

சக்திப் பகுதி
தமிழீழ பொருண்மியமேம்பாட்டுநிறுவனம்
அரசியல்துறை - தமிழீழ விடுதலைப் புலிகள்
காங்கேசன்துறை வீதி, தாவடி,
தமிழீழம்.

",எரிபொருட் தடையை இனிக்காற்றாலை உடைக்கும்,
நீரிறைக்கும், மின்வழங்கும் - புதியயுகம் படைக்கும்''



இப்பொழுது திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும், கந்தரோடை பிரதான வீதியிலும் இவை இயங்கிக் கொண்டிருக்கின்றன.

(கி-9519)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

பட்டதாரி ஆசிரியர்

## நிரந்தர நியமனக் கடிதங்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி பட்டதாரி ஆசிரியர்களுக்கு பட்டதாரி ஆசிரிய நிரந்தர நியமனக் கடிதங்களை வட-கிழக்கு மாகாண கல்வியமைச்சு அனுப்பிவைத்துள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று யாழ் கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளதென கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இந் நிரந்தர நியமனக் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகதெரியவருகின்றது.

வளர்ந்தோருக்கான

## எழுத்தறிவூட்டல் திட்டம் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் வலயம்- 1 கல்வித்திணைக்களம் வளர்ந்தோருக்கான எழுத்தறிவூட்டல் திட்டத்தினை பொம்மை வெளிப் பகுதியில் அமைந்துள்ள வாழ்க்கைத் திறன் கல்வி நிலையத்தில் ஆரம்பித்து வைத்துள்ளது கடந்த 25ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட இத் திட்டத்தில் முதல் பாடசாலைக்கு செல்லாத வளர்ந்தோரும்; பாடசாலைகளில் பாடங்களைத் தொடர முடியாதோரும் சேர்ந்து எழுத்தறிவு பெற முடியும் என தெரிவிக்கப்பட்டது. [பா]

ஐ. தே. க. செயற்குழு உறுப்பினர்

## பதவி விலகல் கடிதங்களை பெறுவதில் டி. பி. தீவிரம்

[கொழும்பு]

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு அங்கத்தவர்களிடையே பதவி விலகல் கடிதங்களைப் பெறுவதற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அதி தீவிர முயற்சி மேற் கொண்டு வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன:

தனக்கு விசுவாசமானவர்களை இப் பதவிக்கு நியமனம் செய்வது தொடர்பாக நடவடிக்கை மேற் கொள்வதற்காக இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. செயற்குழுவில் நாற்பத்தி ஐந்து உறுப்பினர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை அடுத்த செயற் குழு கூட்டம் அடுத்தமாத ஆரம்பத்தில் நடை பெறும் என்றும், இதற்கு முன்னர் இக் கடிதங்களை பெற்று தனக்கு விசுவாசமானவர்களை நியமனம்செய்வதற்கு முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றார் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதே வேளை அமைச்சர்களான சிறிசேன கூரே, காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகியோர் இன்னும் செயற் குழு உறுப்பினராக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

180 நாட்கள் பணிபுரிந்தோருக்கு

## நிரந்தர நியமனம் பற்றிய சுற்றுநிருபம் வந்தது

[யாழ்ப்பாணம்]

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்பு 180 நாட்கள் அரசுப் பணிகளில் தற்காலிகமாக கடமையாற்றியோருக்கு நிரந்தர நியமனம் செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பான சுற்றுநிருபம் யாழ். மாவட்டத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் மேதினச் செய்தி தொடர்பான இந்த சுற்றுநிருபம் நேற்று யாழ். கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளது.

இதன்படி யாழ் மாவட்டத்திலும் கடந்த மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் 180 நாட்கள் கடமையாற்றிய அரச ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளனர் என தெரியவருகின்றது. (பா)

---

**வாகரையில்**

கை தழுவிக்கொண்டனரா வார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

**புல்மோட்டையில்**

இதேசமயம் பூரண கட்டுப்பாட்டு பகுதியில் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை கிழக்கு இலங்கைப் பகுதியில் சமீபத்தில் புலிகள் தாக்குதலை தொடங்கியுள்ளனர் என்றும் இந்த வாரத்தில்மட்டும் இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளனர் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

---

**காமினியின்**

விற்கு இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தை முழுமையாகக் கையாளக் கூடிய ஒரு சந்தர்ப்பம் டி, பி விஜேதுங்காவினால் வழங்கப்படுமானால் அவர் இந்திய-சிறிலங்கா உடன்பாட்டின் அடிப்படையிலேயே பிரச்சினை தீர்வைச்சிந்திப்பாராயினும் இன்றைய அரசியல் இராணுவ சூழ்நிலைக்கு ஏற்பவே அதைக் கையாள வேண்டும் அவர், இந்திய சிறிலங்காவின் உடன்பாட்டிற்கு புத்துயிர் ஊட்டுதாக காட்டி இந்தியாவிடம் மறைமுக உதவிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடும். இதேசமயம் தனது அரசியல் தீர்வை செயற்படுத்த இந்திய இராணுவத்திற்குப் பதிலாக சிறிலங்கா இராணுவத்தையே பயன்படுத்தக் கூடும். ஏனெனில் காமினி திசாநாயக்காவும் தமிழீழ விடுதலைப் போராட்டம், இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதில் குறியாகவேஉள்ளார்.

---

**தேற்றாத் தீவில்**

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்குக

### முஸ்லிம் காங்கிரஸ் புதிய எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டாலேயே முஸ்லிம்களின் பிரச்சினையும் தீரும். அதனால்அரசாங்கம் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு யுத்தத்தை தீர்வாக முன்வைக்காமல் அரசியல் தீர்வையே முன்வைக்க வேண்டுமென்பதே பாராளுமன்றத்தில் தமது முதலாவது உரையில் வலியுறுத்த உள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்த அஷ்ரப்பிற்குப் பதிலாக பதவி ஏற்கவுள்ள சட்டத்தரணியான யு. எல். எம். முகைதீன் கூறியுள்ளார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 வீத நிலப்பரப்பும், அம்பாறையில் 20 வீத நிலப்பரப்பும், திருக்கோணமலையில் 50 வீத பகுதியும் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் எனவே அரசாங்கம் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைப்பது அவசியமானது எனவும் திரு: முகைதீன் தெரிவித்தார்.

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மீது கம்பஹா எம்.பி. சந்தேகம்

### பாதாள உலக கிரிமினல்களோடு தொடர்பாம்

[கொழும்பு)

பாதாள உலக கிரிமினல்களினால் கொலை செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பொது மக்கள் தொடர்பாக இது வரை எதுவித அக்கறையும் கொள்ளாத சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாதாள உலக கிரிமினல் கைது செய்யப்பட்டதில் மட்டும் ஏன் அக்கறை செலுத்துகின்றனர் எனசுதந்திரக் கட்சி கம்பஹா மாவட்டபாராளுமன்ற உறுப்பினர்பெர்னான்டோபிள்ளை கேள்வி எழுப்பியுள்ளார்.

பாதாள உலக கிரிமினல் தலைவன் சொத்தி உபாலியும் அவன் சகாக்களும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இவர்களைச் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் சந்தித்து, நலம் மற்றும் தடுப்பு காவல் நிலைமைபோன்றவற்றைவிசாரித்ததையும் சுட்டிக் காட்டிய அவர் இதனால்பலத்த சந்தேகம் தோன்றுவதாக மேலும் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்திற்கும் பாதாள உலக கிரிமினலுக்கும் இடையேயுள்ள தொடர்புதேசிய மட்டத்தில்மட்டுமல்ல சர்வதேச மட்டத்தில் ஆராயப்பட வேண்டியவிடயம் எனவும் தெரிவித்தார்.

---

**நேர்முகப்**

பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வேறுமாவட்டங்களில் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டியவர்களும், அம்மாவட்டங்களுக்கு போக முடியாதவர்களும், பரீட்சைக்குவிண்ணப்பித்திருந்தும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் கடிதம் கிடைக்காதவர்களும் மாவட்டச் செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

---

**வெளியேசென்று**

திச் சீட்டுடன் அனுமதி வழங்கப்பட்ட செயலகத்திற்கு சென்று பிணையை நீக்கிக் கொள்ளல் வேண்டும் எனப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்,

மேலும் வயதுக்கட்டுப்பாடு உடையவர்களாயின் தேசிய அடையாளஅட்டை இல்லாத பட்சத்தில் தாம் அனுமதி பெறும்போது அனுமதி வழங்கும் செயலகத்தினால் உறுதிப் படுத்தப்பட்டு வழங்கப்பட்ட புகைப்படத்தை சோதனை நிலையத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்லல் வேண்டும்: பின்பு மீளவும் வட பகுதிக்குள் நுழையும் போது அப்படத்தை மீளப் பெற்று அப்படத்துடனும், வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச் சீட்டுடனும் அனுமதி வழங்கப்பட்டசெயலகத்திற்கு சென்று பிணையை நீக்கிக் கொள்ளல் வேண்டும்.

வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச் சீட்டு, புகைப்படம் என்பவற்றை எடுத்து வராததினால் பிணை நீக்குவதில் ஏற்படும் சிரமங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் மேலும் அறியத் தந்துள்ளனர்.

## புதிய துணைவேந்தருக்கு வரவேற்பு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக நியமனம் பெற்றுள்ள பேராசிரியர் க. குணரத்தினம் அவர்களைக் கௌரவித்து பல்கலைக் கழக ஊழியர் சங்கம் இன்று மாலை 3 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் வரவேற்பு விழா ஒன்றை நடாத்தவுள்ளது-

இதே வேளை இவர் துணை வேந்தராக நியமனம் பெற்றமை குறித்துயாழ் பல்கலைக்கழக ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயத்தில் இன்று காலை 7. 30 மணிக்கு விசேட அபிஷேகமும் பூசைகளும் நடைபெறவுள்ளன- இந்நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்-

ஆசிரியர்

## கட்டுநிதி வந்தது

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கான மே மாத சம்பளக் கட்டு நிதி நேற்று யாழ். கல்வித் திணைக்களம் வந்துசேர்ந்துள்ளதாக கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

---

**பிரச்சினைக்கான**

அம்பாறை தேர்தல் தொகுதியைப் பிரித்து ஊவா மாகாணத்துடன் இணைத்து விட்டு எஞ்சிய கிழக்கு மாகாணத்தையும் வடக்கு மாகாணத்தையும்இணைக்கும்யோசனை குறித்து இக்குழுவினர் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது

இந்த யோசனை தொடர்பாக இக் குழுவில் அங்கம் வகிக்கும் பேராசிரியர் வியாங்கொட தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது அபிப்பிராயங்களைக் கேட்டு அறிந்து கொண்டதாக தெரியவருகிறது.

இது இவ்வாறு இருக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எதிர்காலத்தில் தலைமைத்துவப்போட்டி ஏற்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டே பிரதித்தலைவர் பதவி உருவாக்கப்பட்டது என்று கட்சியின் உபதலைவர்களில் ஒருவர் தெரிவித்தார் புதிதாக பிரதித் தலைவர் பதவி உருவாக்கப்பட்டு அது மேல் மாகாண முதல்வர் சந்திரிகா குமாரணதுங்காவிடம் கொடுக்கப்பட்டது குறித்துக் கேட்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றிற்கான கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனங்களை கூடிய விரைவில் தயாரித்து மத்திய குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு சிறிமாவோ பண்டாரநாயக்கா சம்பந்தப்பட்டவர்களுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்-

## வலைப்பந்து சுற்றுப் போட்டி

கல்வி வலயம்-1 பாடசாலைகள் வலைப்பந்துச் சுற்றுப் போட்டிகள் இன்று சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் பிற்பகல் 2-45மணிக்கு ஆரம்பமாகின்றன-

17வயதுப் பிரிவில் இந்து மகளிர் எதிர் வேம்படி மகளிர், கொக்குவில் இந்து எதிர் கலாநிதி தியாகராஜா மம வித்தியாலயமும், 19 வயதுப் பிரிவில் கனகரெட்ணம் மம வித்தியாலயத்தை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரியும் மோதும்-

---

**குடத்தனைப்**

இக்குண்டு வீச்சு தாக்குதல்களினால் தேவாலயமும் சில வீடுகளும் சேதமடைந்தன-

இத் தாக்குதல் நடைபெற்ற போது உலங்கு வானூர்தி ஒன்று வான் பரப்பில் வட்டமிட்டவாறு இப் பகுதி எங்கும் தொடர்ந்து கலிபர் தாக்குதலை நடாத்தியது: இவ் உலங்கு வானூர்தியின் உதவியுடன் புக்காரா தனதுதாக்குதலை இரவு 7.15 வரை மேற் கொண்டது.

இதன்பின் மீண்டும் இரவு எட்டுமணி யளவில் வந்த உலங்குவானூர்தி வெளிச்சம் பாய்ச்சியவாறு குடத்தனைப் பகுதிமீது தொடர்ந்து கலிபர் தாக்குதலை மேற் கொண்டது. இத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை கடற்பரப்பில் தரித்து நின்ற பீரங்கிப்படகிலிருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன கடற்படையும் விமானப்படையும் குடத்தனைப் பகுதி மீது தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டிருந்தவேளை கட்டைக்காட்டு பகுதி இராணுவத்தினர் முகாமிலிருந்து குடத்தனைப் பகுதி மீது எறிகணைத் தாக்குதலை இரவு இரவாக மேற்கொண்டவண்ணமிருந்தனர்.

நல்லூர் ... நூலகம் ... மன்றம் யாழ்ப்பாணம்

**இருமனம் இணைந்தாலே திருமணம் - அது சீதனம் இணைந்த தென்றால் வெறும் மணம்**

# இனப்பிரச்சினை குறித்து பேசுவதற்கு புலிகள் தவிர வேறு எவருமில்லை

## தமிழ் கல்விமான்கள் டி. பிக்கு கடிதம்

சிறிலங்கா அரசு இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்துவதற்கு தமிழ் மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறு எவரும் இல்லை என தமிழ் மூத்தோர் கல்விமான்கள் பேரவை சிறிலங்கா ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பேரவை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக கொழும்பு நாளிதழ் ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. தேசிய கட்சிகள் எவையும் சிறுபான்மையினர் பிரச்சினை தொடர்பாக தமதுகொள்கைகளை பிரகடனப்படுத்தும் வரையில் அவற்றிற்கு வாக்களிக்க வேண்டாம் என தமிழ் மக்களைக் கோரப்போவதாகவும் இதற்காக நாடு முழுவதும் செல்ல தாம் தீர்மானித்திருப்பதாகவும் கல்விமான்கள் பேரவை சிறிலங்கா ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளது.

அத்துடன் ஜனாதிபதி இனவாதிகளாக உள்ள நண்பர்களால், தவறாக வழி நடத்தப்படுகின்றார் எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக கொழும்பு நாளிதழ் தெரிவிக்கிறது.

## தஞ்சையில் பொலிஸ் மீது கைக்குண்டு வீச்சு

### 3 பொலிஸ் உட்பட 8 பேர் காயம்

(சென்னை)

தஞ்சாவூர் அருகே அம்மாபேட்டையில் காரில் வந்து கொண்டிருந்தவர்கள் சோதனையில் ஈடுபட்டிருந்த காவல் துறையினர் மீது நாட்டு வெடி குண்டுஒன்றை வீசினர், இதில் மூவர் காவல் துறையினர்உட்பட எட்டுப்பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் நடைபெற்றது. நாகபட்டினத்திலிருந்து தஞ்சாவூர் சென்று கொண்டிருந்த இந்த காரை வழக்கமான சோதனைக்காக காவல் துறையினர் நிறுத்துமாறு பணித்தபோதே காரில் இருந்தவர்கள் நாட்டுவெடி குண்டை வீசியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

காரில் பயணம் செய்த மூவரில் இருவர் தப்பிச் சென்று விட்டதாகவும் பிடிபட்டவரிடமிருந்து துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை இவ்விடத்தை பார்வையிட உயர் அதிகாரிகள் சென்றுள்ளனர்.

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் மகாஜனாக் கல்லூரியின் இணுவில் மைதானத்தில் நடாத்தி வந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாம் பிரிவுக்கான இறுதிப் போட்டியும் மூன்றாம் இடத்திற்கான போட்டியும் இன்று மாலை நடைபெறும்

மூன்று மணிக்கு ஆரம்பமாகும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் இளவாலை சென் கென்றீஸ் வி.கழகத்தை எதிர்த்து கொக்குவில் பொற்பதி ஐ.வி. கழகமும் 4மணிக்கு ஆரம்பமாகும் இறுதிப் போட்டியில் மயிலங்காடு ஞான முருகன் வி. கழகத்தை எதிர்த்து அச்செழு சித்தி விநாயகர் விளையாட்டு கழகம் மோதவுள்ளது

### தொழில்நுட்ப சேவைக்கு

## அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு முடிவு

வடக்கு கிழக்கு மாகாண தொழில் நுட்ப சேவைக்கு அமைய அடிப்படையில் ஆட்களைச் சேர்த்துக் கொளவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது

மேற்படி தொழில் நுட்ப சேவையில் நிரந்தர நியமனத்துக்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவருவதற்கு முன்னர் இந்த அமைய அடிப்படையிலான நியமனத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

இந்த நியமனத்துக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 30ஆம் திகதி காலை 10-00 மணியளவில்யாழ். நிர்மாணத்திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது தொழில் நுட்ப பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியவர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்

## ஆசிரியர் ஊக்குவிப்பு திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் ஊக்குவிப்புத் திட்டம் கடந்த 23ஆம் திகதி புங்குடுதீவு அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதிக் கல்வி பணிப்பாளர் ஈ. சிவானந்தன் தலைமைதாங்கி ஆசிரியர் மதிப்பீட்டுப் பத்திரங்களைப் பதிவுசெய்யும் வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

### அரசாங்க கூட்டுத்தாபனங்களின்

## வெற்றிட ஆட்சேர்ப்பிற்கு வயதெல்லை அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகளின் வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வயதெல்லை ஐந்துவருடங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அரசாங்க சேவை வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான வயதெல்லை 40இல் இருந்து 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அரச எழுதுவினைஞர் மற்றும் சேவைகள் அரச கூட்டுத்தாபன பொதுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை 45 வரை அமுலாகும்.

அரச சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான வயதெல்லை மாற்றத்தினால் வைத்தியம், பொறியியல் மற்றும் வேறு துறைகளுக்கு ஆட்சேர்க்கும் விதிகளுக்கு பாதிப்பு ஏற்படாது என பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**27 - 05 - 1994**

**வெள்ளி இரவு**

08-01 - கலைமஞ்சரி- முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது வெளிச்சம் வெள்ளி இதழ். அடுத்து சிறுகதை - புதியகாற்று சிறுகதையை அடுத்து கவிதைகள்

1. நாமும் போவோம் களம் நோக்கி
2. கொடுமுடி

08-30 - செய்திகள்

08-40 - அரசியல் அரங்கம் ''மாயாதேவியும் மகாத்மா காந்தியும்''

08-50 - வாத்திய கானங்கள்

**28 - 05 - 1994**

**சனி காலை**

07-02 - மாவீர வணக்கம்

07-15 -நீங்கள் கேட்டவை

07-30 - செய்திகள்

07-35 - பத்திரிகைச் செய்திகள்

07-40 - தொடர்ந்து நீங்கள் கேட்டவை

**இறைச்சிக் கோழி**

இறைச்சிக் கோழி எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**சுவையருவி**

யாழ்ப்பாணம் நெல்லியடி

(சி- 9527)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அசையாமணி கிருஷ்ணபிள்ளை

படசாலை வளவு, கரணவாய் கிழக்கு திருமதி அசையாமணி கிருஷ்ணபிள்ளை நேற்று 26-5-1994 வியாழக் கிழமை காலமானார். அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், டாக்டர் கே. பாலசுப்பிரமணியம், திருமதி திருமாமணி கணேசமூர்த்தி ஆகியோரின் தாயாரும், திரு த. கணேசமூர்த்தி (பிரதேச செயலகம், மருதங்கேணி) திருமதி ஜமுனா பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மாமியாரும், கஸ்தூரி, கௌதமன் பபிதாவின் அன்புப் பேர்த்தியாரும், திரு / திருமதி ஐயம்பிள்ளை - சின்னப்பிள்ளையின் அருமை மகளுமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று (26-5-1994) பிற்பகல் 2மணியளவில் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் நடைபெற்றது. இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்

திருமாநிதி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
(5886)

தகவல்:
த. கணேசமூர்த்தி
(மருமகன்)



## வர்ணகுலசிங்கம் இராசரத்தினம்

(வல்வெட்டித்துறை)

திருகோணமலை சென்றல் வீதி N. A. மார்க்கண்டு அன் பிறதேர்ஸ், கொழும்பு - 11, 173 கெய்சர் வீதி, N. A. மார்க்கண்டு அன் பிறதேர்ஸ், குறொஸ் கன்றி ரான்ஸ்போட் சேவிஸ் (Cross Country Transport Service) ஸ்தாபனங்களின் உரிமையாளராகிய வர்ணகுலசிங்கம் இராசரத்தினம் அவர்கள் 94-05-21 ஆந் திகதி சனிக்கிழமை காலை தமது திருகோணமலை இல்லத்தில் காலமாகி விட்டார். அன்னார், காலஞ் சென்ற அப்புக்குட்டி வர்ணகுலசிங்கம் தம்பதிகளின் அருமை மகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், திருமதி தேவயானி, (இங்கிலாந்து). திருமதி தாட்சாயினி, தனஞ்சயன் ஆகியோரின் அருமைத் தந்தையும், டாக்டர் ஏ. வரப்பிரசாதம் (இங்கிலாந்து), டாக்டர் எம். மனோகர் (காசில் மருத்துவமனை- கொழும்பு), ஆகியோரின் கனிவு மாமனாரும், அரியரத்தினம், காலஞ்சென்ற லிங்கரத்தினம், காலஞ் சென்ற அரசரத்தினம், சரோஜினிதேவி, (தென்னாபிரிக்கா) ஆகியோரின் பாசச் சகோதரரும், சஞ்சீவ், சஞ்சய், சாரா ஆகியோரின் இனிய பேரனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14, மத்திய வீதி, உவர்மலை (திருகோணமலை) இல்லத்தில் 94 - 05 - 24-ந் திகதி செவ்வாய்க்கிழமை பி ப. 4-00 மணிக்கு நடைபெற்று திருகோணமலை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

எங்கள் சோகத்தில் நேரில் வருகை தந்து ஆறுதல் கூறிய, அனுதாபச் செய்திகள் அனுப்பிய உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவர்க்கும் நன்றி கூறுகிறோம்.

தகவல்:
தனஞ்சயன் இராசரத்தினம்
(மகன்)

(8391)

## திரு. கந்தையா தருமலிங்கம்

(முன்னாள் அரச ஒப்பந்தகாரரும், மறவன் புலோ சாலவயற்கரை வீரகத்திப் பிள்ளையார் ஆலய நிர்வாகியும்)

மறவன்புலோ திரு. கந்தையா தருமலிங்கம் 26-5-94 இல் அமரராகி விட்டார். அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர்), புவனேஸ்வரி, கையிலேஸ்வரி, வள்ளிநாயகி (மருத்துவ உதவியாளர், மட்டக்களப்பு), கனகமணி, செந்தில்நாதன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பஞ்சலிங்கம் (சவூதி), கந்தசாமி (ஓய்வு பெற்ற C. T. B. உத்தியோகத்தர்), காலஞ் சென்ற சர்வபரிபாலன், லோகநாதன் (யாழ் மாநகரசபை) திருமதி பொன்னம்மா (கரவெட்டி), திருமதி சசிலேகாதேவி [நீர்வேலி] ஆகியோரின் மாமனாரும் ஆவார் ஈமக்கிரியைகள் இன்று 27-05-94 பிற்பகல் 2மணியளவில் மணற்காடு மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

மறவன்புலோ
சாவகச்சேரி.

தகவல்:
த. செந்தில்நாதன்

[8402]